# வானவில்

VAANAVIL
ISSUE – 54 JUNE 2015

இதழ் - 54 ஆனி 2015


# தமிழ் மக்களுக்கு மாற்று கொள்கைகளும் புதிய தலைமையும் இன்றைய அவசிய தேவை!



இலங்கையில் இவ்வருடம் ஜனவரி மாதம் 08ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் மூலம் புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவானதுடன், ஆட்சி மாற்றமும் (வலிந்து திணிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் சிறுபான்மை ஆட்சி) ஏற்பட்டுள்ளது. இந்த ஆட்சி மாற்றத்தை பெரிதும் விரும்பியவர்கள் உள்நாட்டு பிற்போக்கு சக்திகள் மட்டுமின்றி அவர்களது சர்வதேச எஜமானர்களும் (இந்தியாவும் அதற்குள் உள்ளடக்கம்) கூட என்பதில் சந்தேகமில்லை.

இவர்களைத் தவிர உண்மையாக நாட்டை நேசிப்பவர்கள், ஜனநாயகவாதிகள், முற்போக்கு சக்திகள் எனப்படுவோரில் ஒரு சிறு பகுதியினரும் சில சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஒரு ஆட்சி மாற்றத்தை விரும்பினர் என்பதில் சந்தேகமில்லை. முன்னையவர்களை விட இவர்கள்தான் தாம் எதிர்பார்த்ததிற்கு மாறாக இந்த அரசாங்கம் செல்வதையிட்டு கவலைப்படுபவர்களாகவும், கவலைக்கு உரியவர்களாகவும் உள்ளனர். அரசியல் அனுபவம், வரலாற்றுப் பட்டறிவு, நிலைமைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளாமை போன்ற காரணங்களால் இவர்கள் விட்ட தவறை இட்டு தற்பொழுது கவலைப்பட்டு பிரயோசனமில்லை. அவர்களாகவே பட்டு படித்து உணர்ந்து கொள்ள வேண்டியதுதான்.

புதிய அரசாங்கம் நாட்டை தேசிய நலன்களுக்கு எதிராகவும், மக்கள் நலன்களுக்கு எதிராகவும் கொண்டு செல்கின்றது என்ற குற்றச்சாட்டு ஒருபுறம் இருந்தாலும், இந்த மாற்றத்தை செய்து கொள்வதற்கு பொதுமக்களுக்கு இருந்த ஜனநாயக உரிமையையும், அதை அவர்கள் எவ்விதமான பயமுறுத்தலோ அல்லது அழுத்தங்களோ இல்லாமல் பிரயோகிப்பதற்கு இருந்த சூழ்நிலையையும், அதை அவர்கள் பிரயோகித்த துணிவையும் மெச்சத்தான் வேண்டும்.

இன்று மட்டுமின்றி, நாடு சுதந்திரம் பெற்ற 1948 பெப்ருவரி 4ஆம் திகதி முதல் நாட்டின் பெரும்பான்மை மக்களான சிங்கள மக்கள் பல தடவைகள் ஆட்சி மாற்றங்களைச் செய்து வந்திருக்கின்றனர். பதவியில் இருந்த அரசாங்கங்களைப் பொறுத்தவரையிலும் கூட, ஒருமுறை ஜே.ஆர்.ஜெயவர்த்தன கருத்துக் கணிப்பு என்ற மோசடி மூலம் தனது அரசாங்கத்தின் ஆயுட்காலத்தை ஜனநாயக விரோதமாக நீடித்ததை தவிர, வேறு எந்த அரசாங்கமும் தேர்தலை ஒத்தி வைத்தது கிடையாது.

அதுமட்டுமல்லாமல், நாட்டின் பழம் பெரும் பிரதான ஆளும் கட்சிகள் மற்றும் இடதுசாரி கட்சிகள் மாத்திரமின்றி, தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஜே.வி.பி, கெல உருமய, சரத் பொன்சேகாவின் கட்சி போன்ற புதிய கட்சிகள் உருவாகும் சூழலும், அவையும் மக்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்கு பெறும் சூழலும் இருந்திருக்கிறது.

அதேபோல, ஆரம்ப காலத்தில் தேசிய ரீதியில் ஐ.தே.கவுடனும், பிராந்திய ரீதியில் தமிழரசுக் கட்சியுடனும் கைகோர்த்திருந்த முஸ்லிம் மக்கள், பின்னர் தமக்கென தனித்துவமான

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..

# புதிய உலக ஒழுங்கு: புலம்பெயர்ந்த இரகசிய பேச்சுவார்த்தை

இம்மாதம் (யூன் மாதம்) 8ந் திகதி இலங்கை வெளிவிவகார அமைச்சராலும் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினாலும் உலகத்தமிழர் பேரவையாலும் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையொன்றின் வாயிலாக இலண்டனில் இலங்கை அரசு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, உலகத்தமிழர் பேரவைச் சார்ந்த பிரதிநிதிகளும் (உலகத்தமிழர் பேரவையென அறிக்கையில் சொல்லப்பட்டாலும், பிரித்தானியா தமிழர் பேரவைச் சார்ந்தவர்களே பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்) மற்றும் தென்னாபிரிக்கா, சுவிட்சலாந்து, நோர்வே நாட்டு பிரதிநிதிகளும் இரகசிய (ஏன் இந்த இரகசியம்?..) பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது தெரியவந்துள்ளது. இந்த பேச்சுவார்த்தைக்கு முன்னர் இப்பேச்சுவார்த்தை தொடர்பாக செய்தி எந்தவொரு ஊடகத்திலும் வெளிவராததால், இப்பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் மிகவும் இரகசியமாக பேணப்பட்டுள்ளது என்பது உறுதியாகத் தெரிய வருகின்றது.

இலங்கையில் நல்லிணக்கம் ஒன்றினை ஏற்படுத்தி, அரசியல் தீர்வொன்றினை எட்டுவதற்காக இலங்கை அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடனோ அல்லது தென்னாபிரிக்கா, சுவிட்சலாந்து, நோர்வே நாட்டு பிரதிநிதிகளுடனோ பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது என்பது புருவத்தை உயர்த்தும் விடயமல்ல. ஆனால் இவர்கள் அனைவருடனுமான பேச்சுவார்த்தையில், இலங்கையின் முன்னைய அரசினால் அறிவிக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட பட்டியலிலுள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புகளில் ஒன்றான உலகத்தமிழர் பேரவையும் இணைந்துள்ளது என்பதுபற்றி ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. இந்த அமைப்போ அல்லது வேறு எந்த புலம்பெயர் அமைப்போ இலங்கை அரசியலில் தீர்மானகரமான பங்கொன்றினை வகிக்கவேண்டிய கட்டாயமான புறச்சூழலொன்று உருவாகியிருப்பது மாதிரியும் தெரியவில்லை. அவ்வாறான சூழ்நிலையில் ஒரு புலம்பெயர் அமைப்புடனான பேச்சுவார்த்தை என்பது அந்த அமைப்புக்கு 'தலைப்பா' கட்டும் காரியமே. அத்துடன் இவ்வாறானதொரு பேச்சுவார்த்தைக்கு தூண்டிய சக்திகளின் பின்னணிபற்றியும் இதனால் எதிர்காலத்தில் அரசியலில் ஏற்படுத்தப்போகும் பாரிய விளைவுகளையும் ஆராயமலிருக்க முடியாது.

இப்பேச்சுவார்த்தை இலண்டனில் நடைபெற்றுள்ளதாலும், மேற்கத்தைய சக்திகளின் உதவியுடன் நிறுவப்பட்டுள்ள புதிய இலங்கை அரசே இப்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாலும், மேற்கத்தைய சக்திகளின் நிகழ்ச்சி நிரலின் (புதிய உலக ஒழுங்கின்) கீழேயே இப்பேச்சுவார்த்தை நிகழ்ந்துள்ளதாக உறுதிபடக் கூறலாம். இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக புலம்பெயர் தமிழ்சார் அமைப்பொன்றுக்கு இலங்கையின் அரசியலில் மூக்கை நுழைப்பதற்கு பகிரங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அங்கீகாரத்திற்கான அடிப்படை, இலங்கையின் தறபோதைய அரசு மற்றும் தமிழத்தேசியக். கூட்டமைப்பினர் போலவே இந்த அமைப்பும் மேற்கத்தைய சக்திகளின் அடிவருடிகள் என்பதே.

புலிகளின் ஆதரவாளர்கள் புலம்பெயர் நாடுகளில் பல பிரிவுகள், பிரிவுகளுக்குள் உட்பிரிவுகள் என சிதைந்து போயுள்ளனர். இந்த பிரிவுகளில் பெரும்பாலானவை இலங்கை அரசு மீது எப்போதும் போலவே பகையுணர்வுடனேயே இருக்கிறார்கள். அதனால் இந்த உடைந்து சின்னாபின்னமாய் பலவீனமாக போயுள்ள புலிகளின் எச்சசொச்சங்களை தங்கள் வலைக்குள் வீழ்த்திய ஏகாதிபத்திய சக்திகள், இலங்கை அரசினை நவகாலனித்துவ பிடிக்குள் வைத்திருப்பதற்காக இவர்களை துரும்புச்சீட்டாக பயன்படுத்துகின்றன.

உலகத்தமிழர் பேரவை என்ற அமைப்பு புலிகள் முற்றுமுழுதாக முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப்பட்ட பின்னர், ஏறத்தாழ 6 ஆண்டுகளின் முன்பு ஸ்தாபிக்கப்பட்டது. பிரித்தானியா தமிழர் பேரவை, உலகத்தமிழர் பேரவையை விடவும் சில வருடங்கள் பழைமையானது. இவ்விரு அமைப்புகளின் தலைமைப்பீடத்திலுள்ள அனைவருமே புலம்பெயர் நாடுகளில் புலிகளை தீவிரமாக விசுவாசித்தவர்கள். அதனால் புலிகளின் நிகழ்ச்சி நிரலினை, புலிகளின் முற்றுமுழுதான அழிவிற்கு பின்னர், இலங்கைக்கு வெளியிலிருந்து இயங்க வைப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி தமது இருப்பினை, குறிப்பாக பணவருவாயினை, பேணி வருகின்றனர். இதற்காக பல ஊர்வலங்களை புலிப்பதாகைகள் தாங்கி ஐரோப்பிய நாடுகளில் நடாத்தியுள்ளனர். இலங்கை அரசு மீதான சர்வதேச விசாரணை என்பது இவர்களது நாளாந்த புலம்பல்களில் மிக முக்கியமானது.

இலங்கையில் இனங்களுக்கிடையே நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய நல்லிணக்கம் ஒன்றினை ஏற்படுத்துவதற்கும், பொருளாதார காரணிகளுக்காகவும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் ஆதரவு அவசியம் என்பது நிட்சயமாக ஓரளவு ஏற்றுக்கொள்ளக்கூடியதே. இலங்கைக்கு எந்த வகையிலாவது உதவ வேண்டுமென்று நல்லெண்ணங்கொண்டவர்கள் என்றும் இலை மறை காயாக உதவிய வண்ணமே இருக்கிறார்கள். இந்த சக்திகளை மென்மேலும் ஊக்குவிப்பதற்கு இன்னமும் இலங்கையில் எந்த பொறிமுறையும் உருவாக்கப்படவில்லை.

புலிகள் அமைப்பு சகலவிதமான ஜனநாயகங்களையும் குழி தோண்டி புதைத்தவர்கள். எனவே புலிகளை வெறித்தனமாக ஆதரித்ததை பின்புலமாக கொண்ட புலம்பெயர் தமிழர்களோ அல்லது அவ்வாறானவர்கள் சார்ந்த அமைப்புகளோ, எந்த பிசாசின் துணை கொண்டாவது, எப்போதுமே இலங்கைக்கு மீண்டும் நாசகாரம் விளைவிப்பதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக்கிடப்பவர்கள் என்ற எச்சரிக்கையை நாம் சொல்லித்தான் ஆகவேண்டும். *


## வானவில்

**தொடர்பு முகவரி**: 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

# இலங்கையை பொலிஸ் இராச்சியமாக மாற்றி வரும் ரணில் விக்கிரமசிங்க ஆட்சி!

இலங்கையில் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்குரிய போதியளவான பாராளுமன்ற உறுப்பினர்களையோ அல்லது அதற்கான தார்மீக ரீதியிலான உரிமையையோ கொண்டிராத ஐக்கிய தேசியக் கட்சி, இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் செய்த தவறுகளால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி வைத்துக்கொண்டு, முன்னைய அரசாங்கத்தின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், அவ்வரசில் கடமை புரிந்த அரச அதிகாரிகள் ஆகியோரைப் பழிவாங்கும் நடவடிக்கைகளை வேகமாக முடுக்கி விட்டிருக்கிறது.

100 நாள் வேலைத்திட்டம் என்ற பெயரில் ஐ.தே.க. அரசு செய்துவரும் மக்கள் விரோத, ஜனநாயக விரோத, தேச விரோத நடவடிக்கைகள் எண்ணிலடங்காதவை. 100 நாட்களுக்குள்ளேயே இவ்வளவு நாசகார நடவடிக்கைகளை எடுத்தவர்கள், 5 வருடங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தால், நாட்டை எங்கே கொண்டுசென்று விடுவார்கள் என்பதை நினைத்தாலே நெஞ்சு பதறுகின்றது.

## சேதுபந்தனன்

தற்போது பிரதமர் பதவியில் கூச்சநாச்சமின்றி ஒட்டிக் கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, தனது மாமனாரும், 'அரசியல் குள்ளநரி' என்று வர்ணிக்கப்படுபவருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, 1977இல் ஆட்சிபீடம் ஏறியவுடன் எப்படிச் செயல்பட்டாரோ, அவ்வாறே செயற்படுவதைக் காண முடிகிறது. ஜே.ஆர். அன்று ஆட்சிக்கு வந்தவுடன், 'நாட்டில் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பப் போகிறேன், சிங்கப்பூராக மாற்றப் போகிறேன்' என்றெல்லாம் சூளுரைத்தார். ஆனால் 17 வருடங்களாகப் பதவியில் இருந்த ஜே.ஆரும், அவரது சகபாடியான ஆர்.பிரேமதாசவும், அவர்களது சகாக்களும் செய்ததெல்லாம் நாட்டை நரக லோகமாக மாற்றியதுதான்.

அவர்கள் தமது 17 வருட கொடூர ஆட்சியில் பல தடவைகள் தமிழ் மக்களுக்கு மேல் கொடூரமான இன வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டதுடன், இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றி, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்ததுடன், அவர்களது பல இலட்சம் கோடி பெறுமதியான சொத்துக்களையும் சூறையாடியவர்கள். அதுமாத்திரமின்றி பல இலட்சம் தமிழ் மக்களை நாடும் வீடும் அற்றவர்களாக்கி நடுத்தெருவிலும் உலகெங்கிலும் அலைய வைத்தவர்கள்.




1981இல் அபிவிருத்திச் சபைத் தேர்தல் என்ற போர்வையில் யாழ்ப்பாணத்தின் உலகப் பிரசித்தி வாய்ந்த நூலகத்தையும், பத்திரிகைக் காரியாலயங்களையும், நகரையும், பாராளுமன்ற உறுப்பினரின் இல்லத்தையும், ஆலயத் தேரையும் எரித்து யாழ் நகரைச் சுடுகாடாக்கியவர்களும் இந்த ஐ.தே.கவினரே. (அப்படியானவர்களுடன்தான் இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை இரண்டறக் கலந்து நிற்கிறது)

1988 – 89 காலகட்டத்தில் ஜே.வி.பியின் இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியின் போது, அதை அடக்குகிறோம் என்ற பெயரில் சுமார் 60,000 சிங்கள இளைஞர்களின் உயிரைக் குடித்தவர்களும் இவர்களே. (அப்படியானவர்களுடன்தான் இன்றைய ஜே.வி.பி தலைமை கூடிக்குலாவித் தேன்நிலவு கொண்டாடுகிறது)

எம்பிலிப்பிட்டியவில் நூற்றுக்கும் அதிகமான அப்பாவி சிங்களப் பாடசாலை மாணவர்களைக் கொன்று புதைத்தவர்களும் இந்த ஐ.தே.கவினரே.

இப்படியாக இன்னும் என்னென்னவோ கொடுமைகளையெல்லாம் அன்று ஐ.தே.க. ஆட்சியினர் செய்தனர். அப்படியான அரசில்தான் இன்றைய பிரதமர் ரணிலும் ஒரு முக்கியமான அமைச்சராக அன்று இருந்தார். (அதுமட்டுமில்லாமல், 1983 இன வன்செயலின் போது கொழும்பில் தமிழருக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஐ.தே.க. அமைச்சர்கள் குழுவில் ரணிலும் இருந்ததார் என்ற குற்றச்சாட்டும் உண்டு.)

ஆனால் இவ்வளவு கொடுமைகள் அன்று 17 வருடங்களாக நடந்தும், இன்று இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாகக் கூச்சல் போடும் மேற்கத்தைய சக்திகள் வாய் திறந்து என்ன, ஏது என்று ஒரு சொல் கூடக் கேட்டது கிடையாது.

இன்று அதே மேற்கத்தைய சக்திகளின் முயற்சியாலும், இந்திய மத வலதுசாரி சக்திகளின் சதி சூழ்ச்சிகளாலும், இலங்கையில் அவர்களுக்குச் சாதகமான ஒரு அரசு கொண்டு வரப்பட்டு, அன்றைய ஐ.தே.க. அரசின் பாணியில் சம்பவங்கள்

அரங்கேற்றப்பட்டு வருகின்றன. அதில் மிகவும் கடை கோடி வலதுசாரியான ரணில் முக்கியமான பங்கு வகித்து வருகின்றார்.

ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவுக்கு நாட்டு மக்கள் அளித்த வாக்குகளை தனக்கு அளித்த வாக்குகளாக எண்ணியே ரணில் இவ்வாறெல்லாம் செயல்பட்டு வருகின்றார்.

அதில் ஒன்றுதான் தனது மாமனார் ஜே.ஆர். கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என ரணிலுக்கு திடீரென்று எழுந்த சிந்தனை. 37 வருடங்களாக வராத இந்தச் சிந்தனை இப்பொழுது வந்ததிற்குக் காரணமில்லாமல் இல்லை.

தனது மாமனார் அளவுக்கு ரணில் பெரிய அரசியல் குள்ளநரியாக இல்லாவிட்டாலும், ஒரு குட்டி அரசியல் குள்ள நரியாகத்தன்னும் இருப்பதற்கான சகல தகுதிகளும் அவருக்கு இருக்கிறது. அதனால்தான் தன்னால் ஜனாதிபதித் தேர்தலில் ஒருபோதும் வெற்றிபெற முடியாது என்று கண்ட ரணில், மைத்திரியைப் பொதுவேட்பாளர் என்று முன்னிறுத்தி, ஏமாற்றக்கூடியவர்களையெல்லாம் ஏமாற்றி அவருக்கு வாக்குப் போட்டு வெற்றி பெற வைத்துவிட்டு, இப்பொழுது அவரது நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்து தனது கைகளில் அதிகாரத்தை எடுக்கும் சூழ்ச்சிகளில் இறங்கியிருக்கிறார். அவரது இந்த முயற்சி ஒரு அரசியல் சதி நடவடிக்கையன்றி, வேறு எதுவுமல்ல.

அவரது இந்த நடவடிக்கை ஒரு பழைய சுவாரசியமான கதையைத்தான் நினைவூட்டுகிறது. அதாவது ஒரு கடுமையான குளிர்காலத்தில் ஒரு குரங்கும், பூனையும் குளிர்காய்வதற்காக அடுப்பங்கரையொன்றை நாடி அதன் அருகில் குந்தியிருந்திருக்கின்றன. அப்பொழுது அங்கே ஒரு பலாக்கொட்டை இருப்பதைக் குரங்கு கண்டு அதை நெருப்பில் சுட்டுத்தின்ன ஆசைப்பட்டிருக்கிறது. எனவே அதை எடுத்து நெருப்புத் தணலில் போட்டுவிட்டது. ஆனால் பலாக்கொட்டை சுடப்பட்ட பின்னர் அதை எடுக்கும் போது நெருப்புச் சுட்டுவிடும் என்று கண்ட குரங்கு, திடீரென பூனையின் கைகளைப் பிடித்து அந்தப் பலாக்கொட்டையை எடுத்து பூனைக்குக் கொடுக்காமல் தான் மட்டும் தின்று தீர்த்தது. நெருப்பில் சூடு கண்டது பூனையின் கைகள், பலாக்கொட்டை தின்றது பூனை. இப்படியாகத்தான் இருக்கிறது ரணில், மைத்திரியைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற வழிமுறை.




அதுமாத்திரமல்ல, மைத்திரி சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியாக இருக்கையிலேயே, ரணில் அவரையும் மீறி, அவருக்குத் தெரியாமலேயே பல அதிகாரத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இதற்கு ஒரு உதாரணம், கடந்த பெப்ருவரி 13ஆம் திகதி ரணில் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குத் தெரியாமல் வெளியிட்டுள்ள ஒரு அரச வர்த்தமானி அறிவித்தலில், 'பொலிஸ் பாரிய நிதி மோசடிப் பிரிவு' என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்க உத்தரவிட்டிருக்கிறார். இந்த அமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் அதற்குப் பொறுப்பான ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் யாரும் நேரடியாகவே நிதி மோசடி சம்பந்தமான முறைப்பாடொன்றைச் செய்ய முடியும். நிதி மோசடி போன்ற விடயங்களைத் தடுப்பதற்கென தற்போதைய சட்டங்களிலேயே போதிய வசதிகள் இருக்கையில் இத்தகைய மேலதிக ஏற்பாடு எதற்காக என்ற கேள்வி எழுகின்றது. அதன் உண்மையான நோக்கம், முன்னைய ஆட்சியாளர்களை நேரடியாகவும், வகைதொகை இன்றியும், சுலபமாகவும் கைது செய்து நீண்டகாலம் அடைத்து வைப்பதற்காகவே. எனவேதான் ரணில் இந்த ஏற்பாட்டை முன்னைய ஆட்சியில் 10 வருடங்களாக சிரேஸ்ட அமைச்சராக இருந்த இன்றைய ஜனாதிபதிக்கும் தெரியாமல் செய்திருக்கிறார் என்ற அபிப்பிராயமே அரசியல் அரங்கில் நிலவுகின்றது.

இந்த விடயம் குறித்துப் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், இது நாட்டை பொலிஸ் இராச்சியமாக மாற்றுவதற்கான முயற்சி என்றும், அதனால்தான் ஜனாதிபதிக்கும் தெரியாமல் ரணில் இதைக் கொண்டு வந்திருக்கிறார் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதுமட்டுமல்ல, அண்மையில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட 19ஆவது சட்டத் திருத்தத்தில் கூட ஊடகங்களுக்கு கடிவாளம் இடும் சரத்துகளைச் சேர்ப்பதற்கு ரணில் குழுவினர் முயன்று எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டிருக்கிறது.

நாட்டின் ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுமின்றி, பிரதம நீதியரசர், சட்ட மா அதிபர், பொலிஸ் மா அதிபர் போன்றவர்களின் அதிகாரங்களையும் ரணில் குழுவினர் தமது கைகளில் எடுத்துச் செயல்பட முயல்வதாக முன்னாளைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியிருக்கிறார். ரணில் அரசாங்கத்தின் போக்கை இப்படியே விட்டு வைத்தால், 1977 – 94 கால 17 வருட ஐ.தே.க. ஆட்சியை விட மோசமான ஒன்றாக ரணில் ஆட்சி அமைந்துவிடும் அபாயம் இருக்கின்றது.

அதன் காரணமாக இராமாயணக் காவியத்தில் கம்பன் வர்ணிப்பது போல, "(இராவணன்) வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான்" என்ற நிலை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பிரதமர் ரணிலால் ஏற்பட்டாலும் வியப்பதற்கில்லை. *

# வரலாற்றில் கார்ல் மார்க்ஸ் தத்துவத்துக்கு விதிக்கப்பட்ட வருங்காலம்


**ஒரு முற்குறிப்பு:**


சோவியத் யூனியனிலும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோசலிச அரசுகள் வீழ்ச்சி அடைந்ததை வைத்துக் கொண்டும், சீனா உட்பட எஞ்சியுள்ள சோசலிச நாடுகள் மேற்கொள்ளும் காலத்தின் தேவை கருதிய சில பரீட்சார்த்த சோசலிசக் கட்டுமான முறைகளை வைத்துக் கொண்டும், முதலாளித்துவச் சித்தாந்தவாதிகள் மார்க்சியம் காலாவதியாகிவிட்டது என்றும், பின்நவீனத்துவவாதிகள் மார்க்சியத்தில் திருத்தம் வேண்டும் என்றும். மேலும் இதுபோன்ற எதிர்ப்புரட்சிக் கருத்துக்களையும் இடையறாது பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

அவர்களுக்கு பதில் அளிப்பது போல எமது மாபெரும் தோழர் லெனின் அவர்கள் 102 வருடங்களுக்கு முன்னர் — அதாவது அவர் தலைமை தாங்கி நடாத்திய 1917ஆம் ஆண்டு மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சிக்கு முன்னர், ரஸ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் 'பிராவ்தா' ஏட்டில் 1913 மார்ச் 1இல் எழுதிய கட்டுரையைக் கீழே பிரசுரித்திருக்கிறோம்.

இக்கட்டுரையில் அன்றைய தேதியின் பின்னர் நடக்கவிருந்த மாற்றங்களை எவ்வளவு தூரதிருஸ்டியுடனும் மேதாவிலாசத்துடனும் மிகச் சரியாக லெனின் கணித்திருக்கிறார் என்பதைக் காண முடியும். அவரது இந்த எதிர்வு கூறல்கள் இன்றைக்கும் அச்சொட்டாகப் பொருந்துவனவாக உள்ளன.

**–வானவில் ஆசிரியர் குழு**





**சோ**சலிச சமுதாயத்தின் சிற்பியாய்ப் பாட்டாளி வர்க்கம் வகிக்கும் வரலாற்றுப் பாத்திரத்தை மார்க்சின் தத்துவம் தெளிவுபடுத்துகிறது. இதுவே இத்தத்துவத்தின் முதன்மையான சிறப்பு. மார்க்ஸ் இத்தத்துவத்தை விரித்துரைத்தபின் உலகெங்கணும் நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகளின் போக்கு இதை மெய்ப்பித்திருக்கிறதா?

1844ல் மார்க்ஸ் இதை முதன்முதல் எடுத்துரைத்தார். 1848ல் வெளியான மார்க்ஸ், எங்கெல்ஸ்சின் **கம்யூனிஸ்ட் அறிக்கை** ஏற்கெனவே இத்தத்துவத்தை முழுமையாகவும் முறையாகவும் விரித்துரைத்தது. இந்நாள் வரை இதுவே தலைசிறந்த விரிவரையாய் இருந்து வருகிறது. அதன்பின் உலக வரலாறு மூன்று முக்கியமான காலக்கூறுகளாய்த் தெளிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. (1) 1848ஆம் ஆண்டுப் புரட்சியிலிருந்து பாரீஸ் கம்யூன் (1871) வரை, (2) பாரீஸ் கம்யூனிலிருந்து ருஸ்யப் புரட்சி (1905) வரை, (3) ருஸ்யப் புரட்சிக்குப் பின்.

இந்தக் காலக்கூறுகள் ஒவ்வொன்றிலும் மார்க்சின் தத்துவத்துக்கு விதிக்கப்பட்ட வருங்காலம் என்னவென்பதைக் காண்போம்.

## 1

முதல் காலக்கூறின் துவக்கத்தில் மார்க்சின் தத்துவம் எவ்வகையிலும் கோலோச்சும் நிலையில் இருக்கவில்லை. சோசலிசத்தின் எண்ணிறந்த குழுக்கள் அல்லது போக்குகளில் ஒன்றாகவே இருந்தது. உண்மையில் கோலோச்சிக் கொண்டிருந்த சோசலிச வடிவங்கள் பிரதானமாய் நமது நரோத்தியத்தை ஒத்தவை. (ருஸ்யப் புரட்சிகர இயக்கத்தில் 1860 — 70களிடையே தோன்றிய ஒரு சிறு முதலாளித்துவப் போக்கு — மொர்) வரலாற்று இயக்கத்தின் பொருள்முதல்வாத அடித்தளத்தைப் புரிந்துகொள்ளாமை, முதலாளித்துவச் சமுதாயத்தில் ஒவ்வொரு வர்க்கத்துக்குமுள்ள பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் தனித்துப் பிரிக்கும் திறனின்மை, ஜனநாயகச் சீர்திருத்தங்களின் முதலாளித்துவத் தன்மையை "மக்கள்", :நீதி", "உரிமை" முதலியவற்றைப் பற்றிய பல்வேறு போலி சோசலிசச் சொற்றொடர்களைக் கொண்டு மூடிமறைத்தல் முதலான பலவற்றிலும் இவை நமது நரோதியத்தை ஒத்தவை.

மார்க்சியத்துக்கு **முற்பட்ட** சோசலிசத்தின் இந்தக் கதம்பத் திரளான, ஆடம்பரமான வாய்வீச்சு வடிவங்கள் யாவற்றுக்கும் 1848ம் ஆண்டுப் புரட்சி மரண அடி கொடுத்தது. எல்லா நாடுகளிலும் இப்புரட்சி சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களையும் **செயலில் வெளிப்படச் செய்து** புலப்படுத்திக் காட்டிற்று. குடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் பாரிசில் 1848 யூன் நாட்களில் தொழிலாளர்களைச் சுட்டு வீழ்த்தியதானது பாட்டாளி வர்க்கம் **மட்டும்தான்** இயற்கையாகவே சோசலிசத் தன்மையுடையது என்பதை முடிவாய்ப் புலப்படுத்திக் காட்டிற்று. மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் எந்தவகையான பிற்போக்கையும் கண்டு அஞ்சுவதைவிட பாட்டாளி வர்க்கத்தின் சுயேச்சையைக் கண்டுதான் நூறு மடங்கு கூடுதலாய் அஞ்சி நடுங்கினர். கோழைகளாய் அண்டிப் பிழைக்கும் மிதவாதிகள் பிற்போக்கிற்கு அடிபணிந்து தண்டமிட்டனர். விவசாயி மக்கள் நிலப்பிரபுத்துவத்தின் மீதமிச்சங்கள் ஒழிக்கப்பட்டதுடன் திருப்தியடைந்து ஒழுங்கின் ஆதரவாளர்களோடு சேர்ந்து கொண்டனர். சில சமயங்களில் **தொழிலாளர் ஜனநாயகத்துக்கும் முதலாளித்துவ மிதவாதத்துக்கும்** இடையே ஊசலாடியதோடு சரி. வர்க்கத்தன்மையற்ற சோசலிசம், வர்க்கத்தன்மையற்ற அரசியல், இவை குறித்த எல்லாத் தத்துவங்களும் அப்பட்டமான அபத்தமே என்பது நிரூபணமாயிற்று.

முதலாளித்துவ மாற்றங்களுக்குரிய இந்த வளர்ச்சியைப் பாரீஸ் கம்யூன் (1871)

நிறைவு செய்தது. வர்க்க உறவுகள் மிகவும் ஒளிவுமறைவற்ற உருவில் காட்சி தரும் அரசியலமைப்பு வடிவமான குடியரசு உறுதி பெறப் பாட்டாளி வர்க்கத்தின் வீரதீரம் மட்டுமே காரணம்.

ஏனைய எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் மேலும் சிக்கலான, நிறைகுறையான வளர்ச்சி இதே விளைவுக்கு இட்டுச் சென்றது — முதலாளித்துவச் சமுதாயம் திட்டவட்டமான உருப் பெற்றுவிட்டது. முதல் காலக்கூறின் (1848 — 71) கடைப் பகுதியில், மார்க்சியத்துக்கு முற்பட்ட சோசலிசம் **இறந்து போயிற்று.** முதலாவது அகிலம் - (1864 — 72 - சர்வதேசச் தொழிலாளர் சங்கம் - மொர்) மற்றும் ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சி எனும் சுயேச்சையான **பாட்டாளி வர்க்கக்** கட்சிகள் உதித்தெழுந்தன.



## 2

இரண்டாவது காலக்கூறு (1872 — 1904) அதன் "அமைதியான" தன்மையால், புரட்சிகள் இல்லாத நிலையால் முதல் காலக்கூறினின்று வேறுபடுத்திக் காட்டப் பெற்றது. மேற்குலகு முதலாளித்துவப் புரட்சிகளை நடத்தி முடித்துவிட்டது. கிழக்குலகு இன்னும் அந்த மட்டத்துக்கு உயர்ந்தாகவில்லை.

வரவிருந்த மாற்றங்களுக்காக "அமைதி வழியில்" தயாரிப்புகள் செய்து கொள்ளும் கட்டத்தினுள் மேற்குலகு அடியெடுத்து வைத்தது. அடிப்படையில் பாட்டாளி வர்க்கத்தன்மையுள்ள சோசலிஸ்ட் கட்சிகள் எங்கும் அமைக்கப்பட்டன. இவை முதலாளித்துவ நாடாளுமன்ற முறையை உபயோகித்துக் கொள்ளவும், தமக்குச் சொந்தமான நாளேடுகளையும் கல்வி போதனை நிலையங்களையும் தொழிற்சங்கங்களையும் கூட்டுறவுக் கழகங்களையும் நிறுவிக் கொள்ளவும் கற்றுக் கொண்டன. மார்க்சின் தத்துவம் முழுநிறைவான வெற்றி பெற்றுப் **பரவத் தொடங்கிற்று.** பாட்டாளி வர்க்கத்தின் சக்திகளை ஆய்ந்து தேர்ந்து அணிதிரட்டும் நிகழ்ச்சிப் போக்கும், வரவிருந்த போராட்டங்களுக்கான அதன் தயாரிப்பும், மெதுவாக இருந்தாலும் இடையறாது முன்னேறின.

மார்க்சியத்தின் தத்துவார்த்த வெற்றியால் கட்டாயப்படுத்தப்பட்ட அதன் பகைவர்கள் மார்க்சியவாதிகளாய் **மாறுவேடமிட்டுக் கொண்டனர்** — வரலாற்றின் இயக்கவியல் போக்கு அத்தகையதாய் இருந்தது. உள்ளுக்குள் உளுத்துப் போய்விட்ட மிதவாதமானது சோசலிசச் **சந்தர்ப்பவாதத்தின்** வடிவில் தனக்குப் புத்துயிர் அளித்துக்கொள்ள முயன்றது. மாபெரும் போர்களுக்காக சக்திகளை ஆயத்தமாக்கிக் கொள்வதற்குரிய இந்தக் காலக்கூறு, இந்தப் போர்கள் கைவிடப்படுதலைக் குறிப்பதாய் அவர்கள் வியாக்கியானம் செய்தனர். கூலி அடிமை முறையை எதிர்த்துப் போராடுவதற்கு அடிமைகளின் நிலைமைகளில் ஏற்பட்ட மேம்பாடு, இந்த அடிமைகளை சுதந்திரத்துக்கான தமது உரிமையை அற்பக் காசுக்காக விற்றதைக் குறிப்பதாய் அவர்கள் கொண்டனர். கோழைத்தனமாய் அவர்கள் "சமூக அமைதி" (அதாவது அடிமையுடைமையாளர்களுடன் அமைதி), வர்க்கப் போராட்டத்தைக் கைவிடுதல் முதலானவற்றை உபதேசித்தனர். நாடாளுமன்றத்தில் சோசலிச உறுப்பினர்களிடையிலும், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பல்வேறு அதிகாரிகளிடையிலும், "அனுதாபங் கொண்ட" அறிவுத்துறையினரிடையிலும் அவர்கள் மிகப் பல ஆதரவாளர்களைப் பெற்றிருந்தனர்.

## 3

ஆனால் சந்தர்ப்பவாதிகள் "சமூக அமைதியைப்" புகழ்ந்தும் "ஜனநாயகத்தில்" புயல்களுக்கு அவசியமில்லை என்று பேசியும் மனநிறைவெய்தி முடித்தார்களோ இல்லையோ, மாபெரும் உலகப் புயல்களுக்கான ஒரு புதிய தோற்றுவாய் ஆசியாவிலே உதித்தெழுந்தது. ருஸ்யப் புரட்சியைத் தொடர்ந்து துருக்கியிலும் பாரசீகத்திலும் சீனாவிலும் புரட்சிகள் மூண்டன. (19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய துருக்கிய முதலாளித்துவப் புரட்சிகர இயக்கம், பாரசீகத்தில் - ஈரானில் - நிலப்பிரபுத்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான புரட்சிகர இயக்கம், 1911இல் சீனாவில் டாக்டர் சன் யாட் சென் தலைமையில் மஞ்சூரிய அரச வம்ச ஆட்சியைத் தூக்கி எறிந்து அமைத்த முதலாளித்துவப் புரட்சி — மொர்) புயல்களுக்கும் ஐரோப்பாவில் அவற்றின் "எதிரொலிகளுக்கும்" உரிய சகாப்தத்தில்தான் இப்பொழுது நாம் வாழ்ந்து வருகிறோம். மாபெரும் சீனக் குடியரசுக்கு — "நாகரிகமடைந்த" பல்வேறு கழுதைப்புலிகளும் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு இன்று இக்குடியரசை எதிர்த்துக் கிளம்புகின்றன — ஏற்படும் கதி எதுவாயினும், உலகில் எந்தச் சக்தியாலும் ஆசியாவில் பழைய பண்ணையடிமை நிலையைத் திரும்பவும் நாட்டவோ, ஆசிய நிலை, அரை ஆசிய நிலை நாடுகளில் பெருந்திரளான மக்களின் வீரம் செறிந்த ஜனநாயகத்தை அழித்தொழிக்கவோ முடியப் போவதில்லை. வெகுஜனப் போராட்டத்துக்குத் தயார் செய்வதற்கும் அதை வளர்த்துச் செல்வதற்குமான நிலைமைகளில் கவனம் செலுத்தாமலிருக்க சிலர், ஐரோப்பாவில் முதலாளித்துவதத்துக்கு எதிரான தீர்மானகரமான போராட்டம் நீண்ட காலத்துக்குத் தள்ளிப் போடப்பட்டு வந்ததினால் நம்பிக்கையிழந்த நிலைக்கும் அராஜகவாதத்துக்கும் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டனர். அராஜகவாத நம்பிக்கை வரட்சி எவ்வளவு கிட்டப்பார்வையானது, நெஞ்சு உரமில்லாதது என்பதை இப்பொழுது நாம் காண முடியும்.

எண்பது கோடி மக்கள் தொகை கொண்ட ஆசியா இதே ஐரோப்பிய இலட்சியங்களுக்கான போராட்டத்தினுள் ஈர்க்கப்பட்டிருக்கும் இவ்வுண்மை நமக்கு நன்னம்பிக்கையை ஊட்டி ஆர்வமளித்திட வேண்டும், நம்பிக்கை வரட்சியை அல்ல.

ஆசியப் புரட்சிகள் மிதவாதத்தின் திராணியின்மையையும் இழிநிலையையும், ஜனநாயகத் துடிப்புள்ள வெகுஜனங்களுடைய தானியங்கு நிலையின் சிறப்பான முக்கியத்துவத்தையும், பாட்டாளி வர்க்கத்துக்கும் எல்லா வகையான முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் இடையிலுள்ள எடுப்பான பிரிவினைக் கோட்டையும் திரும்பவும் எமக்குக் காட்டியுள்ளன. ஐரோப்பா, ஆசியா இவை இரண்டின் அனுபவத்துக்குப் பின், வர்க்கத்தன்மையற்ற அரசியல் குறித்தும் வர்க்கத்தன்மையற்ற சோசலிசம் குறித்தும் பேசுகிறவர் யாராயிருந்தாலும் அவர் கூண்டிலே வைத்து ஆஸ்திரேலியக் கங்காரு பக்கத்தில் கண்காட்சியில் காட்டப்பட வேண்டியவரே ஆவார்.

ஆசியாவை அடுத்து ஐரோப்பாவும் - ஆசிய வழியில் இல்லாவிட்டாலுங்கூட -

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க..**


# ஆபத்து வித்தியாவுடன் முடிந்துவிடவில்லை!

புங்குடுதீவில் வித்தியா என்ற பள்ளி மாணவி காம வெறியர்களும் சமூக விரோதிகளுமான சிலரால் காட்டுமிராண்டித்தனமாக கூட்டு வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டதுமல்லாமல், கொலையும் செய்யப்பட்ட சம்பவம், தமிழ் மக்களை மட்டுமின்றி, இலங்கையின் அனைத்து இன மக்களினதும் கோபத்தைக் கிளறி விட்டுள்ளது.

முன்பும் இப்படியான சம்பவங்கள் சில தமிழ்ப் பகுதிகளில் நடந்திருந்தாலும் கூட, இந்தச் சம்பவத்துக்கு எதிராக ஏற்பட்ட பொதுமக்களின் ஆவேச உணர்வு வேறு எதற்கும் எதிராக ஏற்படவில்லை எனச் சொல்லலாம். அதுமட்டுமின்றி, முன்னைய சம்பவங்கள் பலவற்றுக்கு இராணுவத்தினர் மீது அல்லது 'ஒட்டுக்குழுக்கள்' மீதுதான் உடனடியாக விரல்கள் நீட்டப்படுவது வழமை.

ஆனால் வித்தியாவின் விடயம் மிகவும் வித்தியாசமானது. சம்பவம் தமிழர்களான ஒரே இனத்தவரால், ஒரே ஊரவர்களால், ஒரே சொந்த உறவுக்காரர்களாலேயே நடத்தப்பட்டுள்ளது. இங்குதான் பல கேள்விகள் எழுகின்றன.

ஒரு சிறுமியை அவரது உறவினர்களே கூட்டாக மிருகங்களையும் விடக் கேவலமாக கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தவும், கொலை செய்யவும் எப்படி முடிந்தது? சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் போதையில் இருந்திருந்தாலும் கூட, இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட ஏறத்தாழ பத்துப் பேர் வரையிலான அவர்களில் ஒருவனுக்காவது மனிதர்களுக்கு இயல்பாக ஏற்படக்கூடிய மனித உணர்வு அந்த நேரத்தில் ஏற்படாமல் போனது ஏன்? அப்படிப் பார்க்கையில் இப்படியானவர்கள் தங்களது தாய், சகோதரிகள், பிள்ளைகளைக் கூட மிருக வெறிக்கு உள்ளாக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?




குற்றவாளிகளில் ஒருவன் வித்தியாவின் தாய் மீதான தனிப்பட்ட கோபம் ஒன்றுக்குப் பழிவாங்குவதற்காக தனது கூட்டாளிகளைச் சேர்த்துக் கொண்டு அபலைப் பெண்ணான வித்தியாவைக் கடித்துக் குதறிப் பழி தீர்த்திருக்கிறான் என ஒரு காரணம் சொல்லப்படுகிறது. அந்த அளவுக்கு தமிழர்கள் சிலரின் மனோபாவம் மாறியிருக்கின்றது என்றால், அது நமது சமூகத்தின் ஆபத்தான நிலையைத்தான் படம் பிடித்துக் காட்டுகிறது. ஏனெனில் இந்த நிலை இந்த எட்டுப் பத்துப் பேருடன் நின்றுவிடக்கூடிய நிலை அல்ல.

ஏனெனில் 30 வருடப் போர் பெரும்பாலான தமிழர்கள் மத்தியில் அராஜக மனோநிலை, பழிவாங்கும் எண்ணம், கட்டறுந்த மன நிலை, அச்சம், விரக்தி, துயரம், கையறு நிலை, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை போன்ற இன்னோரன்ன நிலைமைகளைத் தோற்றுவித்திருக்கிறது. மனோதத்துவவியல் நிபுணர்களே தமிழர்களில் பலபேர் போர் காரணமாக மனோவியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் எனச் சுட்டிக்காட்டி வந்திருக்கிறார்கள். அத்துடன் வெளிநாட்டுப்பணம், தாராளமான வங்கிக் கடன்கள், புதிய வேலை வாய்ப்பு வருவாய் என்பன புதியதொரு நுகர்வுக் கலாச்சாரம் ஒன்றை உருவாக்கியுள்ளதுடன், போதை வஸ்துப் பாவனை, தென்னிந்திய மற்றும் ஆங்கில மூன்றாந்தரச் சினிமாக்களின் கலாச்சாரத் தாக்கம் போன்றவையும் இன்றைய தமிழ் சமூகத்தை மிகவும் ஆக்கிரமித்துள்ள சமாச்சாரங்களாகும்.

இந்த நிலைமை முன்னரே சிலரால் அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. யுத்தத்தின் பின்னர் அதிகரித்து வந்த பாலியல் சம்பவங்கள், அடிதடிகள், வாள்வெட்டுகள், வழிப்பறி, பண மோசடி, ஏமாற்று, அடாவடித்தனங்கள் என இவை படிப்படியாக வளர்ந்து வந்துள்ளன.

உண்மையில் இப்படியான நிலைமை ஏற்படாது தடுப்பதில், அரசாங்கத்தின் சட்டப் பாதுகாவலர்களை விட தமிழ் சமூகத்துக்குப் பாரிய கடமை இருக்கின்றது. தமிழ் அரசியல் கட்சிகள் அதிலும் குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, கல்விமான்கள், மத அமைப்புகள், கலாச்சார நிறுவனங்கள் என்பன இவற்றைக் கட்டுப்படுத்துவதிலும், இளைஞர்களை நல்வழிப்படுத்துவதிலும் முக்கியமான பங்கை வகித்திருக்க வேண்டும். ஆனால் அவை எதுவுமே அவற்றில் அக்கறை

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க..**

## பற்களைப் பாதுகாக்கச் சில குறிப்புகள்

○ தினமும் இரண்டு முறை பல்துலக்க வேண்டும்.

○ மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கட்டாயமாக ருத் பிரஸ் மாற்ற வேண்டும்.

○ பல் துலக்கிய பின் ஈறுகளை மிருதுவாகத் தேய்த்துக் கொடுப்பது நலம்.

○ புகை பிடித்தல், புகையிலைப் பொருட்களைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

○ பல் இடுக்குகளை ஃப்ளாஸ் கொண்டு சுத்தம் செய்தல் பற்சிதைவைத் தடுக்கும்.

○ ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பல் மருத்துவர் மூலம் பற்களை சுத்தம் செய்வது, பற்களின் ஆயுளை அதிகரிக்கும்.

○ கல்சியம், விற்றமின்-சி, புரத உணவுகள், உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வது பற்களை வலுவாக்க உதவும்.

○ பல் வலி ஏற்பட்டால் மட்டும் பல் மருத்துவரை அணுக வேண்டும் என்பது தவறான எண்ணம். ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கண்டிப்பாக பல் மருத்துவரிடம் பற்களின் ஆரோக்கிய நிலையைச் சரிபார்க்க வேண்டும்.

(இந்தியாவின் Apollo White Dental நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு குறிப்பிலிருந்து)

## மூடப்பட்டவை இவ்வளவென்றால்....!




இப்பொழுதெல்லாம் உலகின் எல்லா நாடுகளிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அரசுசாரா அமைப்புக்கள், என்.ஜி.ஓக்கள் எனப் பல பெயர்களில் பல்லாயிரக்கணக்கான நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. வெளித் தோற்றத்தில் அவை அரசியல் ஈடுபாடு இல்லாத அமைப்புகளாகத் தோன்றினாலும், உள்ளார்ந்த ரீதியாக அவை அரசியல் பணிகளையே முன்னெடுத்து வருகின்றன. இல்லாவிட்டால் அவற்றுக்கு நிதி வளங்களை அளிக்கும் சக்திகள் அவற்றை நிறுத்தி விடுவர். ஜனவரி 08இல் இலங்கையில் ஏற்பட்ட மேற்கத்தைய சக்திகளுக்குச் சார்பான ஆட்சி மாற்றத்திலும் இந்த அரசுசாரா அமைப்புகள் தீர்க்கமான ஒரு பங்கை வகித்திருந்தன.

இந்தியாவிலும் இத்தகைய அமைப்புகளால் காலத்துக்காலம் பல தொல்லைகள் ஏற்பட்டு வருகின்றது. அதில் ஒன்றுதான் தமிழ்நாட்டின் கூடங்குளம் அணு நிலைய எதிர்ப்புப் போராட்டம். இப்படியான 9,000 நிறுவனங்களின் உரிமத்தை இந்திய மத்திய அரசு இரத்துச் செய்திருக்கிறது. மூடப்பட்டவை இவ்வளவு தொகை என்றால், இன்னமும் இயங்கிக் கொண்டிருப்பவை எத்தனையோ?

## மார்க்ஸ் கண்ட கனவு!

“காலையில் ஒரு விவசாயியாகவும், பிற்பகலில் ஒரு தொழிலாளியாகவும், மாலையில் ஒரு தத்துவவாதியாகவும்” மனிதர்கள் வாழும் சமூகமொன்றை கார்ல் மாக்ஸ் கனவு கண்டார் என, ‘இந்தியா ருடே’ சஞ்சிகை தனது சமீபத்தைய இதழ் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறது.

## உலகம் சுற்றும் வாலிபன்

‘உலகம் சுற்றும் வாலிபன்’ என்றதும் எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படம்தான் பலருக்கும் உடன் ஞாபகத்துக்கு வரும். ஆனால் நாம் இங்கு குறிப்பிடும் ‘வாலிபர்’ எம்.ஜி.ஆர் போல் படத்துக்காகச் சுற்றாமல் நிஜமாகவே அசுர வேகத்தில் உலக நாடுகளைச் சுற்றுகிறார். அவர் வேறு யாருமல்ல. இந்தியாவைக் ‘காக்க’ப் புறப்பட்ட அந்நாட்டின் பிரதமரான நரேந்திர மோடி தான்.

மோடி பிரதமராகப் பதவி ஏற்ற ஒரு வருடத்தில் 18 நாடுகளைச் சுற்றி வந்திருக்கிறார்! இந்த வேகத்தில் போனால் அவர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## மத்தியதரை உணவின் மகிமை!

அண்மையில் வைத்தியத்துறை ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின்படி, குறைந்த அளவு கொழுப்பு உட்கொள்பவர்களையும் விட, மத்தியத்தரைக்கடல் பிரதேச உணவு வகைகளை உண்பவர்களுக்கு 30 வீதம் குறைவான அளவிலேயே இருதயத்தாக்க நோய் வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்குக் காரணம், மத்தியதரைப் பிரதேச உணவில் மீன்கள், காய்கறிகள், பழ வகைகள், நன்கு சுத்திகரிக்கப்பட்ட ஒலிவ் எண்ணெய் என்பன கூடுதலாகப் பயன்படுத்தப்படுவதே எனத் தெரிய வந்துள்ளது.

மிருகங்களின் இறைச்சி வகைகளிலிருந்து புரதத்தைப் பெறுபவர்களுக்கு, மரக்கறி வகைகளிலிருந்து புரதத்தைப் பெறுபவர்களை விட கூடுதலான அளவு இருதய நோய்கள், புற்றுநோய், இரத்த அழுத்தம் என்பன வருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

# ஆட்டிசம் என்றால் என்ன?

ஒரு குழந்தையின் வளரும் பருவத்தில் ஏற்படும் ஒரு நிலையாகும் (Development Disorder). இது ஒரு நோய் அல்ல நிலைதான். அதனால் இதற்கு மருந்து இல்லை. இது குழந்தையின் பேச்சினை முதலில் பாதிக்கும். பேச்சு, தகவல் தொடர்பு (Communication) இவற்றில் பிரச்சினை இருக்கும்.

நேருக்கு நேர் பார்க்கமாட்டார்கள். எல்லாவித ஒலிகளையும் கேட்க முடியாது. காதை அவ்வப்போது மூடிக் கொள்வார்கள். நடவடிக்கைகளில் அசாதாரணத் தன்மை இருக்கும். கையை உதறுதல், ஓரிடத்தில் இருக்காமல் ஓடிக்கொண்டே இருத்தல், குதிக்காலைத் தரையில் வைக்காமல் நுனி விரல்களை ஊன்றி நடப்பது என்று பல விதத்தில் இக்குழந்தைகள் வேறுபட்டிருப்பார்கள்.

ஆனாலும், எல்லா ஆட்டிசக் குழந்தைகளுக்கும் இசை மிகவும் பிடிக்கும். அதற்கு செவிசாய்ப்பார்கள். மிக அழகாகப் பாடுவார்கள். டிராயிங், பெயின்டிங், பசில் பொருத்துதல் இவற்றிலும் கெட்டிக்காரர்களாக விளங்குவார்கள். ஓவ்வொருவருக்குள்ளும் ஓவ்வொரு தனித்திறமை இருக்கும்.

நன்றி: மங்கையர் மலர்

# பெண்களே ஜாக்கிரதை!

ஃபேப் இந்தியா என்ற நிறுவனத்தின் பெண்கள் ஆடை மாற்றும் அறையில் இரகசியக் கமிரா பொருத்தப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதைக் கண்டு பிடித்தவர் வேறு யாரும் அல்ல. இந்தியாவை ஆளும் மோடி அரசாங்கத்தின் ஒரு பெண் அமைச்சரான ஸ்மிருதி இரானி தான் கண்டு பிடித்திருக்கிறார்!

ஆனால் அவ்வாறு இரகசியக் கமிராக்கள் எதுவும் பொருத்தப்பட்டிருக்கவில்லை என அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்திருக்கின்ற போதிலும், தாம் கைது செய்யப்படாமல் இருப்பதற்காக முன் ஜாமீன் கேட்டிருக்கிறார்கள். மடியில் கனம் இல்லையென்றால் வழியில் பயம் ஏன்?

# அரளிச் செடியின் விந்தை!

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிரதப் பாதைகளின் ஓரங்களில் அரளிச் செடிகள் நாட்டப்பட்டிருப்பதை நம்மில் பலர் அவதானித்திருக்கிறோம் அல்லவா? அது ஒரு நச்சுச் செடி என்பதால் வீடுகளில் அதை வளர்க்காமல் இப்படி வீதி ஓரங்களில் நாட்டியிருக்கிறார்கள் என பலர் கருதியிருப்பார்கள். ஏனெனில் அதன் பூக்கள் அத்தனை அழகானவை. ஆனால் அவற்றை பாதை ஓரங்களில் நாட்டியிருப்பதற்கான காரணம் வேறு.

அரளிச் செடி வாகனங்களில் இருந்து வரும் ஒளியை உட்கிரகித்து அதன் பிரதிபலிப்பை குறையச் செய்கிறது என்பது ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக வாகன விபத்துகள் குறைகின்றன. இதுதான் அவற்றை வீதியோரங்களில் நாட்டுவதற்கான காரணம்.

# ஓ..அமெரிக்கா!

அமெரிக்காவின் பாதுகாப்பு செலவீனம் சீனாவினதை விடவும் நான்கு மடங்கு அதிகமாகும். அத்துடன் பாதுகாப்பு செலவீனத்தில் அமெரிக்காவிற்கு அடுத்த வரிசையிலுள்ள எட்டு நாடுகளின் மொத்தத் தொகையையும் விடவும் அதிகமானதாகும்.

# 55 வருடங்கள் காத்திருந்த ஈழத்துப் பாடகர்!

55 ஆண்டுகளுக்கு முன்னர் ‘எல்லோரும் இந்நாட்டு மன்னர்’ என்றொரு படம் வெளியானது. அந்தப் படத்தில் இலங்கைப் பாடகரான ஈழத்து இரத்தினம் எழுதிய பாடல் ஒன்று இடம் பெற்றது. அதுதான் இலங்கையர் ஒருவர் தமிழகத் திரைப்படம் ஒன்றுக்கு எழுதிய முதல் பாடல்.

அதன் பின்னர் இப்பொழுதுதான் ஒரு இலங்கையர் தமிழகத் திரைப்படங்களுக்குப் பாடல் எழுத வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. கிழக்கு மாகாணத்திலுள்ள பொத்துவில் கிராமத்தைச் சேர்ந்த அஸ்மின் என்ற இளைஞர் சென்னை கோலிவுட்டைத் தன் பாடல்களால் தற்பொழுது கலக்கத் தொடங்கியிருக்கிறார்.

ஆனாலும் அவரும் இலங்கை மண்ணின் மைந்தரா எனச் சிலர் ஐயம் எழுப்பியிருக்கின்றனர். காரணம் அவரது முப்பாட்டனார் இராமநாதபுரம் தேவிபட்டினத்தைச் சேர்ந்தவர் என்றும், வறுமை காரணமாக இலங்கையில் குடியேறியவர் என்றும் தகவல் வெளியாகி இருப்பதுதான்.

## ஒலியைவிட 10 மடங்கு வேகம்

ஒலியைவிட 10 மடங்கு வேகத்தில் சீறிப் பாயும் 'ஹைபர்சானிக் கிளைட்' (hypersonic glide) வாகனத்தை சீனா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. தற்போது சீனாவிடம் உள்ள அதிநவீன ஏவுகணைகளை அமெரிக்க இராணுவத்தால் எளிதாக இடைமறித்து அழிக்க முடியும். ஆனால் 'ஹைபர்சானிக் கிளைட்' வாகனத்தை ராடரில் கண்டறிய முடியாது. இதனால் அமெரிக்க இராணுவத்தால் தடுக்கவோ, அழிக்கவோ முடியாது என்று பாதுகாப்புத் துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# தலித்தியமும் பின் நவீனத்துவமும்

**அஸ்வகோஸ்**
**(இராசேந்திரசோழன்)**

உலகத்தில் வேறு எங்கும் இல்லாத கொடுமையாக இந்தியாவில் வருண சாதிக் கோட்பாடும், சாதியப் படிநிலை ஏற்றத்தாழ்வும், தாழ்த்தப்பட்டோர் என்கிற இழி நிலையும் நிலவுகிறது. மனித நாகரிகத்திற்கே சவால் விடும் காட்டுமிராண்டித்தனமான இந்த அவலம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். அடிப்படைப் பாகுபாடு முற்றாக நீக்கம் செய்யப்பட்டு, அனைத்து மக்களும் சமம் என்கிற நிலையை அடைய வேண்டும் என்பதே சனநாயக உணர்வுள்ளவர்கள், மனித நேயப் பற்றாளர்கள் அனைவரதும் நோக்கும் நிலையும்.

இதற்காக விழிப்படைந்த தாழ்த்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்டோர் அல்லாதோரில் சனநாயக சமத்துவ நோக்குடைய சக்திகளுமாக, அனைவரும் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்கும் சமத்துவத்திற்கும் போராடி வருகிறார்கள். இவர்கள் பொதுவில் தலித் உரிமைப் போராளிகள் எனப்படுகின்றனர்.

இப்படிப்பட்ட தலித் போராளிகள் அனைவருமே பின் நவீனத்துவவாதிகளாக இருப்பதில்லை, அனைவருமே அப்படி சொல்லிக் கொள்வதுமில்லை. ஆனால் பின் நவீனத்துவவாதிகளாய் உள்ள பலரும் தங்களைத் தலித் போராளிகள் என்று சொல்லிக் கொள்கின்றனர்.

சரி, தலித் போராட்டத்திற்கு உதவுவதாகச் சொல்லப்படும் அவர்களுடைய பின் நவீனத்துவம் தலித் விடுதலைக்கு என்ன வழி சொல்கிறது, தலித் மக்களது வாழ்க்கை மேம்பாட்டுக்கு என்ன பாதையைக் காட்டுகிறது என்பதைத் தற்போது ஆராய்வோம் எனில், அதற்கு முன் தலித் விடுதலை என்றால் என்ன என்பதைச் சற்று பார்த்துக்கொண்டு மேலே செல்வோம்.

ஏனென்றால் விடுதலை எதுவென்று தெரிந்தால்தானே, அதற்கான வழியைச் சொல்ல முடியும். எனவே இந்த நோக்கில் யோசிக்கையில், நம்மைப் பொறுத்தவரைக்கும் தலித் விடுதலை என்பது தீண்டாமை என்கிற வடிவில் நிகழும் அத்தனை கொடுமைகளையும் ஒழிப்பது.




தொட்டால் தீட்டு என்பது, இரட்டைக் குவளை – தேங்காய் சிரட்டை முறை, பொது நீர்நிலைகள் – இடங்களைப் பயன்படுத்தத்தடை, பொதுச் சொத்துகளில் வருவாயில் பங்குதர மறுப்பு, நாகரிக வளர்ச்சிகளை அனுபவிக்க – நாகரிகப் பொருட்களை நுகரத்தடை, கல்வி மறுப்பு, மருத்துவ வசதி மறுப்பு, செத்த மாடு தூக்க –பிணத்தை எரிக்க – சவக்குழி தோண்ட – பறை அறிவிக்க நிர்ப்பந்திப்பது உள்ளிட்ட எத்தனை விதமான கொடுமைகள் உண்டோ, அத்தனையையும் முற்றாக ஒழித்துப் பிற சாதி மக்களுக்கு என்னென்ன உரிமைகள் உண்டோ, அத்தனை உரிமைகளையும் தாழ்த்தப்பட்ட மக்களும் அனுபவிக்க வழி வகுப்பது. இதுவே தீண்டாமை ஒழிப்பு என்பதன் சாரம். இதுவே தலித் விடுதலை என்பதும். இதனை ஒட்டுமொத்த சமூக விடுதலையுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது. தீண்டாமை என்கிற வடிவில் நிலவும் கொடுமைகளிலிருந்து மீள்வதற்கு மட்டுமேயான வேலைத்திட்டம் இது. இதனால் வேறு எந்த வேலைத்திட்டமும் வேண்டாம் என்று பொருள் அல்ல. ஒரு உடனடி வேலைத்திட்டம் என்கிற முறையில் மட்டுமே வலியுறுத்தப்படுவது இது.

இதை எப்படி அடைய முடியும்? தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே தனித்து நின்று போராடி இதில் வெற்றிபெற முடியுமா? நிச்சயம் முடியாது. பிற சாதியில் உள்ள சனநாயக சக்திகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு, அதேவேளை அவர்களுக்கு உட்பட்டோ கீழ்ப்படிந்தோ அல்லது அவர்களது வழிகாட்டலிலோ அல்ல, மாறாகப் பிற சாதி மக்களும் தாழ்த்தப்பட்டோரும் இணைந்து சமத்துவமாகப் பொது வழிகாட்டலில் அவர்களோடு சேர்ந்து ஒன்றுபட்டுப் போராடித்தான் வெற்றி காண வேண்டும்.

ஏனெனில் தலித் விடுதலை என்பது தாழ்த்தப்பட்ட மக்கள் என்றென்றைக்கும், காலாகாலத்துக்கும், தாழ்த்தப்பட்ட மக்களாகவே இருந்து கொண்டிருப்பதற்காக அல்ல. அந்த நிலையிலிருந்து விடுபட்டு, பிற சாதி மக்களோடு இரண்டறக் கலந்து ஒன்றுபட்டு, காலப்போக்கில் தாழ்த்தப்பட்ட என்கிற இழிநிலையையே ஒழித்து, அனைத்து மக்களோடும் சமத்துவமாக வாழ்வதற்கான விடுதலையாகும்.

ஆனால் பின் நவீனத்துவவாதிகள் என்ன சொல்கிறார்கள்? தாழ்த்தப்பட்ட மக்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள், அவர்கள் பிற சாதி மக்களுடனெல்லாம் ஒன்றுகலக்க மாட்டார்கள். காரணம் தலித் மக்களுக்கென்று தனி அடையாளம் உண்டு. பண்பாடு உண்டு. எனவே இவர்கள் படிக்காத மக்களோடு ஒன்றுகலக்க மாட்டார்கள். பிற சாதி மக்கள்தான் தலித் மக்களோடு வந்து ஒன்றுபட வேண்டும் என்கிறார்கள்.

அதோடு, தலித் பண்பாட்டை பிற சாதி மக்கள் அனைவரும் ஏற்க வேண்டும். இதன்வழி எல்லோரும் தலித் ஆகிவிட வேண்டும்.

அப்போதுதான் தலித் மக்களுக்கு விடுதலை கிடைக்கும். இதுதான் தலித் விடுதலைக்கான வழி என்கிறார்கள்.

தமிழ்நாட்டில் நிலவும் ஒவ்வொரு சாதிக்கும் ஒரு பண்பாடு, பழக்க வழக்கம் உண்டு என்பதையோ, தனித்தனி அடையாளம் உண்டு என்பதையோ, நாம் மறுக்கவில்லை. ஆனால் இந்த எல்லா சாதி அடையாளங்களையும் அழித்த, சனநாயக அடையாளங்களை, சனநாயகப் பண்பாடுகளை உருவாக்கி ஒன்றுபட வேண்டும், சமத்துவ நிலையை அடைய வேண்டும் என்பதே நமது பொது இலக்கு. அதுதான் நியாயமாகும். ஆனால் பிற சாதிப் பண்பாட்டையெல்லாம் அழித்துத் தலித் பண்பாட்டை மட்டுமே உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்கிறார்கள் பின் நவீனத்துவவாதிகள்.

தமிழ் மக்களை உவப்பூட்டியும், உசுப்பேற்றியும், அவர்களைக் காலாகாலத்துக்கும் தங்கள் பிடியிலேயே வைத்துக் கொள்ளும் நோக்கில் இதைச் செய்து வருகிறார்கள். ஆனால் இது நடைமுறையில் சாத்தியப்படுமா என்பதை நேர்மை உள்ளவர்கள், சனநாயக சிந்தனையாளர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். அவரவர் சாதிப் பண்பாட்டைக் கைவிட்டுப் பொதுவான பண்பாட்டின் கீழ் ஒன்றுபடுவது சாத்தியமா அல்லது ஏதாவது ஒரு சாதிப் பண்பாட்டின் கீழ் நின்று பிற எல்லா சாதி மக்களும் வந்து சேருங்கள் என்பது சாத்தியமா? எது ஒற்றுமையைக் கட்டும்? எது சமத்துவத்தை உருவாக்கும்? எது சாதிய உணர்வுகளைக் கூர்மைப்படுத்தி மேலும் முரண்பாடுகளை வளர்க்காது என்பதையும் நியாய உணர்வு உள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பொதுவாகவே தாழ்த்தப்பட்ட மக்கள் பலரும் இன்று தவறான வழிகாட்டுதல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். வெறும் உணர்வுகளை உசுப்பிவிடும் கருத்துக்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேறு எந்த அரசியல் கட்சியின் தொடர்பும் தேவையில்லை, நமக்கென்று தனிக்கட்சி, நமக்கென்று தனிப்போராட்டம் என்று முழங்கியவர்கள், தேர்தல் சகதியில் விழுந்து பிற கட்சிகளோடு கூட்டு வைத்துக் கொண்டதையோ, தாழ்த்தப்பட்ட மக்கள் பிற சாதி மக்கள் எவரையும் நம்ப வேண்டாம், அவர்கள் யார் தயவும் நமக்குத் தேவையில்லை, நமது விடுதலையை நாமே தேடிக்கொள்வோம் என்றவர்கள், பின்னாளில் பிற சாதிக் கட்சிகளுடனோ அல்லது பிற சாதிக்காரர்கள் எல்லாம் அடங்கிய பிற அரசியல் கட்சிகளுடனோ, உறவு வைத்துக் கொண்டதையோ பற்றியெல்லாம் இங்கு நாம் விமர்சிக்க விரும்பவில்லை.

ஆனால் பின் நவீனத்துவவாதிகள் என்று தங்களைப் பிரகடனம் செய்துகொண்டு தலித் விடுதலையையும் பேசிக் கொண்டிருப்பவர்களையே நாம் கேள்வி கேட்கிறோம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீங்கள் காட்டும் பாதை என்ன? அம்மக்களின் விடுதலைக்கு நீங்கள் வைக்கும் வேலைத்திட்டம் என்ன?

நாமெல்லாம் தீண்டாமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறோம். அக்கொடுமையிலிருந்து விடுபட வேண்டுமானால், நாமெல்லாம் ஒன்றுபட வேண்டும் என்று கருத்தொற்றுமையை வலியுறுத்துவீர்களா? அல்லது இங்கும் கருத்து வேறுபாட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பீர்களா? தாழ்த்தப்பட்ட மக்கள் நாமெல்லாம் ஒரே இனம் என்று அம்மக்களிடம் ஒற்றுமையை உருவாக்க முயல்வீர்களா? அல்லது தமிழ்த் தேசியத்திற்குள் துணைத் தேசியம் பேசுவது போல், தாழ்த்தப்பட்ட மக்களுக்குள்ளும் தேவேந்திர குல வேளாளர், ஆதி திராவிடர், அருந்ததியர் எனப் பாகுபாடு செய்து தனித்தன்மையை வலியுறுத்துவீர்களா?

தாழ்த்தப்பட்ட மக்கள் நமக்குள்ளே பொதுத்தன்மையுண்டு, ஒருமைத்தன்மையுண்டு, நாம் எல்லோரும் ஒன்றுபட்டுப் போராடாமல் நமக்கு விடிவு கிடையாது என்று அம்மக்களை ஒன்றுபடுத்தி அமைப்புக்கட்டி அதன்வழி நின்று போராடுவீர்களா? அல்லது அமைப்பே வன்முறை என்று அமைப்பே வேண்டாம் என்பீர்களா? அமைப்பே இல்லாமல், போராட்டம் இல்லாமல், அம்மக்களுக்கு எப்படி வழிகாட்டுவீர்கள், எப்படி விடியலைத் தேடித் தருவீர்கள்?

பகுத்தறிவுக்குட்பட்ட கொள்கைகள் கோட்பாடுகளை முன் வைத்துப் போராடுவீர்களா? அல்லது பகுத்தறிவே வன்முறை என்று சித்தம் போன போக்கே சிவன் போக்கு என்பது போல் புத்திபோன திசைக்குப் போராட்டத்தை முன் வைப்பீர்களா? காரணகாரிய அடிப்படையில் கோரிக்கைகளை வடிவமைப்பீர்களா அல்லது எந்த தருக்கமும் இல்லாமல் கண்ட மேனிக்கு கோரிக்கை வைப்பீர்களா? எந்த மொழியில் அவர்களோடு தொடர்பு கொள்வீர்கள், போராடுவீர்கள்? தமிழ் மொழியிலா அல்லது மொழியே அபத்தம் என்று அம்மொழியை உதறி ஞான திருஸ்டியிலா? பின் நவீனத்துவவாதிகள் இதற்குப் பதில் சொல்லட்டும். பார்ப்போம்.

(அஸ்வகோஸ் எழுதிய 'பின் நவீனத்துவம் – பித்தும் தெளிவும்' என்ற நூலிலிருந்து இக்கட்டுரை எடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கட்டுரையின் தலைப்பு எமதாகும். இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் சம்பந்தமான அபிப்பிராயங்களை வரவேற்கிறோம் – வானவில்) *


If thought corrupts language, language can also corrupt thought.

**- George Orwell**

சிந்தனை மொழியைக் கெடுக்குமானால், மொழியும் சிந்தனையைக் கெடுக்கும்.

**- ஜோர்ஜ் ஓவெல்**

# அமெரிக்க – கியூப உறவு இயல்பு நிலையை அடைந்தால்…



அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையிலான உறவுகள் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. இதன் ஒரு வெளிப்பாடாக ஏப்ரல் 11ஆம் திகதி பனாமா சிற்றியில் நடைபெற்ற அமெரிக்கக் கண்ட நாடுகளின் உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும், கியூப ஜனாதிபதி ராவுல் கஸ்ட்ரோவும் கைகுலுக்கிக் கொண்டனர். கியூபா சம்பந்தமான அமெரிக்காவின் 55 வருட எதிர்க் கொள்கைகள் தோல்வி அடைந்துவிட்டதாக ஒபாமா பகிரங்கமாக அறிவித்த பின்னரே இந்த புதிய உறவு முயற்சிகள் ஆரம்பமாயின.

1959இல் ஃபிடல் கஸ்ட்ரோ தலைமையில் ஆயுதப் புரட்சி ஏற்பட்டு கியூபாவில் ஒரு சோசலிச அரசாங்கம் அமையும் வரை, அங்கு சர்வாதிகார ஆட்சி நடாத்தி வந்த பட்டிஸ்டாவையே அமெரிக்க அரசுகள் ஆதரித்து வந்தன. அவரது ஆட்சியின் கீழ் கியூபாவின் அனைத்து வளங்களையும் அமெரிக்க பகாசுரக் கொம்பனிகள் உட்பட மேற்குலக பல்தேசியக் கொம்பனிகள் தங்குதடையின்றிச் சுரண்டிச் சூறையாடி வந்தன. ஃபிடல் அதிகாரத்துக்கு வந்ததும் அந்தக் கொம்பனிகளையெல்லாம் நஸ்ட ஈடு எதுவும் இன்றித் தேசவுடைமையாக்கினார்.

அதன் பின்னர் அமெரிக்கா கியூபாவுக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்திப் பொருளாதாரத் தடை விதித்தது. அமெரிக்காவின் இந்தக் கொள்கை கியூபாவை சோவியத் யூனியனையும் இதர சோசலிச நாடுகளையும் நோக்கித் தள்ளி விடுவதில்தான் முடிந்தது. அத்துடன் ஃபிடல் கஸ்ட்ரோவைக் கொலை செய்வதற்கும் ஏராளமான தடவைகள் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் அவை எதுவும் வெற்றிபெறவில்லை.

1990இல் சோவியத் யூனியனிலும் இதர கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோசலிச அரசுகள் வீழ்ச்சி கண்ட பின்னர், கியூபாவிலும் ஃபிடலின் சோசலிச அரசு ஆட்டம் கண்டுவிடும் என மேற்கத்தைய முதலாளித்துவ சக்திகள் எதிர்பார்த்தன. அப்படி எதுவும் நடக்கவில்லை. மாறாக கியூபா தனது சொந்தக்காலில் நிற்க முயற்சிகள் எடுத்ததுடன், பல லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஆதரவையும் பெற்றுக் கொண்டது. அதுமாத்திரமில்லாமல், கியூபாவின் வழியைப் பின்பற்றி பல லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க எதிர்ப்பு அரசாங்கங்கள் உருவாக ஆரம்பித்தன.

## செம்படையான்

அதன்மூலம் கியூபாவைத் தனிமைப்படுத்த முயற்சித்த அமெரிக்காவின் கொள்கை தோல்வி கண்டு, அமெரிக்காதான் தென்னமரிக்கக் கண்ட நாடுகளிடையே தனிமைப்படும் நிலையும் உருவாகத் தொடங்கியது. இந்தச் சூழ்நிலையிலேயே தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கியூபா பற்றிய அமெரிக்கக் கொள்கையை மாற்றியமைக்கத் தீர்மானித்தார்.

கியூபாவுடனான உறவு சுமுக நிலைக்கு வருவதை அமெரிக்கா அரசு மட்டுமின்றி, பெரும்பாலான அமெரிக்கப் பல்தேசியக் கொம்பனிகளும் ஆர்வத்துடன் விரும்புகின்றன. முன்பு கியூபாவைத் தங்குதடையின்றிச் சுரண்டிய அவை மீண்டும் அந்நாட்டுடன் சமுக உறவு ஏற்பட்டால் தமது கைவரிசையைத் திரும்பவும் ஆரம்பிக்கலாம் என எண்ணுகின்றன. அப்படி ஒரு சகஜ நிலை ஏற்பட்டால் அமெரிக்கக் கொம்பனிகளின் எதிர்பார்ப்புகளில் சில இவைதான்:

○ வருடாந்தம் 2 மில்லியன் அமெரிக்கர்கள் கியூபாவுக்கு விஜயம் செய்யும் நிலைமை ஏற்படும்.

○ கரீபியன் நாடுகளுக்கிடையில் உல்லாசப் பயணக் கப்பல் சேவைகளை நடாத்தி வரும் அமெரிக்கக் கொம்பனிகள் தமது பயண மார்க்கத்தில் கியூபத் தலைநகர் ஹவானாவையும் இணைத்துக் கொள்வார்கள்.

○ கியூபாவின் எல்லைப் பிரதேசத்துக்குள் 4.6 பில்லியன் பீப்பாய்கள் வரையிலான எண்ணெய் வளமும், பாரியளவு இயற்கை எரிவாயுவும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றை அகழ்ந்தெடுக்கும் வாய்ப்புக்காக அமெரிக்க நிறுவனங்கள் நாவில் நீர் ஊறக் காத்திருக்கின்றன.

○ இப்பொழுது கியூபா தனது உணவுத் தேவையில் 80 வீதமானதை இறக்குமதி மூலமே பெற்று வருகிறது. கியூபா மீதான அமெரிக்கப் பொருளாதாரத் தடை நீங்கும் பட்சத்தில், அமெரிக்கக் கொம்பனிகள் அங்கு விவசாயத்துறையில் பாரிய முதலீடுகளைச் செய்யத் தயாராகி வருகின்றன.

○ அமெரிக்கத் தொலைத் தொடர்பு மற்றும் இலத்திரனியல் நிறுவனங்கள் கியூபாவில் பெரும் முதலீடுகளைச் செய்ய ஆர்வமாக உள்ளன.

○ அமெரிக்கக் கண்ட நாடுகளிலேயே கியூபாவில்தான் சிசு மரண வீதம் மிகக்

குறைவு. அதற்குக் காரணம் அந்த நாட்டில் இருக்கும் உலகிலேயே மிகச் சிறந்த வைத்திய சேவையாகும்.

அமெரிக்க — கியூப உறவு சமுக நிலையை அடைந்தால், பல இலட்சம் அமெரிக்கர்கள் கியூபாவின் மிக மலிவான வைத்திய சேவையைப் பெறுவதற்கு அங்கு செல்வார்கள்.

இப்படி இன்னும் பலப்பல.

ஆனால் அமெரிக்கர்களின் இந்த எதிர்பார்ப்புக்களை இரத்தம் சிந்தி உருவாக்கப்பட்ட கியூபாவின் புரட்சிகர சோசலிச அரசாங்கமும், தமது நாட்டின் மகோன்னதமான சோசலிச அமைப்பையும், விலை மதிக்க முடியாத நாட்டின் இறைமையையும் கட்டிக்காத்து வரும் கியூப மக்களும் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பதை உலகம் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறது. *

### 7ம் பக்கத்தொடர்ச்சி...

செலுத்தவில்லை. தமது சமூகம் உள்ளூர உக்கி, புழுத்து நாற்றமெடுக்க, அவர்கள் தமது அரசியல் இலாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சிங்கள எதிர்ப்பு, அரச எதிர்ப்பு என்ற ஒற்றை விடயத்திலேயே முழுக் கவனத்தையும் செலுத்திச் செயற்பட்டனர். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் போன்றவையே தமது சமூகக் கடமையை மறந்து இனவாதச் சகதிக்குள் புரண்டன.

எல்லாவற்றையும் கோட்டைவிட்டுவிட்டு, மாகாண அமைச்சர் ஐங்கரநேசன், பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், 'உதயன்' பத்திரிகை போன்றவர்கள் 'புலிகள் இருந்திருந்தால் இப்படியான சம்பவங்கள் நடைபெறாது' என இப்பொழுது சப்புக்கட்டுக் கட்டுகிறார்கள். அவர்களது கூற்றின்படி இந்த நிலைமையை தமிழ் சமூகத்தில் உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்த புலிகளின் மறுபிறப்பே இதற்கான பரிகாரம் என்பதுதான் அவர்களது வாதம்.

இந்த மிருக வெறி உணர்வு இன்று தமிழ் சமூகத்தில் பல படி நிலைகளிலும் ஆழமாகவும் அகலமாகவும் வேரூன்றி இருக்கிறது என்பதுதான் உண்மை. இந்த அநீதியை இழைத்தவர்கள் மத்தியிலிருந்து மட்டும் அது வெளிப்படவில்லை. இந்த அநீதிக்கு எதிராக பொதுமக்களிடம் ஏற்பட்ட நியாயமான கோபாவேச ஆர்ப்பாட்டங்களைத் திசை திருப்பி, நீதிமன்றம் மற்றும் பொலிசார் மீதான தாக்குதல், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல் போன்றவற்றிலும் அது வெளிப்பட்டுள்ளது. அதாவது குற்றமிழைத்தவர்களும், குற்றத்தைக் கண்டிப்பதாகச் சொன்னவர்களும் என, இருபகுதியினருமே அராஜகவாதிகளாகச் செயற்பட்டிருக்கிறார்கள். இது ஒரு ஆபத்தான நிலைமை.

அதுமட்டுமல்ல, இந்த விடயத்தில் பொதுமக்கள் என்ற போர்வையில் சில குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் சக்திகள் திரைமறைவில் நின்று செயற்பட்டிருக்கின்றன. பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் உரையாற்றிய சிரேஸ்ட சட்டத்தரணி என்.சிறீகாந்தா, சில சிறிய கட்சிகள் இந்தக் கலகங்களின் பின்னணியில் செயற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே அரசாங்கத்துக்கும், சட்டம் ஒழுங்கைப் பேணும் பொலிசாருக்கும் பல கடமைகள் இருக்கின்றன. வித்தியா மீது வன்முறையைப் பிரயோகித்த காட்டுமிராண்டிகளைச் சட்டத்தின் முன்னிறுத்தி அவர்களது குற்றங்களுக்காக அதிக பட்ச தண்டனை வழங்குவதுடன், ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் திட்டமிட்ட வன்முறையில் ஈடுபட்டவர்களை மட்டுமின்றி, அவர்களைத் திரைமறைவில் நின்று தூண்டிவிட்ட சக்திகளையும் இனம் கண்டு தண்டிக்க வேண்டும். அரசாங்கம் எடுக்கும் உறுதியான நடவடிக்கையின் மூலம்தான் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் உத்தரவாதப்படுத்த முடியும்.

மறுபுறத்தில், அரசை மட்டும் நம்பியிராமல், தமிழ் சமூகத்தில் உள்ள நலன் விரும்பிகள், புத்திஜீவிகள், பொறுப்பு வாய்ந்த சக்திகள் என்பவர்கள் தமிழ் மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஒரு சமூக - கலாச்சார மறுமலர்ச்சி இயக்கத்தை கிராமங்கள் நகரங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள் என அனைத்து மட்டத்திலும் உடனடியாக ஆரம்பித்து நடாத்த வேண்டும்.

இல்லையேல் தமிழ் சமூகம் வெளி எதிரிகள் எவருமின்றி, தனது சவக்குழியைத் தானே வெட்டுவதைத் தடுத்து நிறுத்த முடியாமல் போகும்.

— யாதவன்

### 6ம் பக்கத்தொடர்ச்சி...

அதிரத் தொடங்கிவிட்டது. 1872 — 1904 ஆண்டுகளின் "அமைதிக்" காலக்கூறு இனி ஒருபோதும் திரும்ப வழியின்றிக் கடந்து சென்றுவிட்டது. உயர்ந்துவிட்ட வாழ்க்கைச் செலவும் டிரஸ்டுகளின் கொடுங்கோன்மையும் என்றுமே கண்டிராத அளவுக்குப் பொருளாதாரப் போராட்டத்தைக் கூராக்கி வருகின்றன. இந்த நிலைமை, மிதவாதத்தால் மிக அதிகமாய்க் கெடுக்கப்பட்டிருக்கும் பிரிட்டிஸ் தொழிலாளர்களையும்கூட இயக்கத்தில் செயல்பட வைத்திருக்கிறது. "வைரம் பாய்ந்த" பிற்போக்குவாத முதலாளித்துவ — நிலப்பிரபுத்துவ நாடான ஜெர்மனியிலும்கூட அரசியல் நெருக்கடி சூடேறி வருவதைக் காண்கிறோம். ஜன்னிவேகம் கொண்ட படைக்கலப் பெருக்கமும், ஏகாதிபத்தியக் கொள்கையும் தற்கால ஐரோப்பாவை வெடிமருந்துப் பீப்பாயையே அதிகம் ஒத்த "சமூக அமைதிச்" சகாப்தமாக மாற்றி வருகின்றன. அதே நேரத்தில் எல்லா முதலாளித்துவக் கட்சிகளும் அழுகிக் கெடும் நிகழ்ச்சிப் போக்கும் பாட்டாளி வர்க்கத்தின் முதிர்ச்சியும் திடமாக முன்னேறி வருகின்றன.

மார்க்சியம் தோன்றியது முதல் உலக வரலாற்றின் மூன்று பெரும் காலக்கூறுகளில் ஒவ்வொன்றும் மார்க்சியத்துக்குப் புதிய உறுதிப்பாடும் புதிய வெற்றிகளும் கிட்டச் செய்திருக்கிறது. ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் தத்துவம் என்ற முறையில் மார்க்சியத்துக்கு வரவிருக்கும் வரலாற்றின் காலக்கூறினில் இன்னும் பெரிய வெற்றி கிட்டப் போகிறது. *

## தவறுக்கான குறிப்பு

இதழ் 53 இல் வெளிவந்த மேதினக் கவிதையை எழுதிய கவிஞரின் பெயர் தவறுதலாக விடுபட்டுப் போயுள்ளது. இந்தத் தவறினை இந்தக் கவிதையினை எழுதிய கவிஞர் வித்தியாசாகர் அவர்களே எமக்கு சுட்டிக்காட்டியுள்ளார். தவறினை சுட்டிக்காட்டிய கவிஞருக்கு நன்றி தெரிவிப்பதோடு, நிகழ்ந்த தவறுக்கும் வருந்துகிறோம்.

- வானவில்

**முன்பக்கத்தொடர்ச்சி...**

*கட்சியாக முஸ்லிம் காங்கிரசையும், பின்னர் வேறு பல கட்சிகளையும் உருவாக்கும் சூழலும் இருந்திருக்கிறது.*

*இன்னொரு பக்கத்தில் மிக நீண்ட காலம் 'மலையகத்தின் முடிசூடா மன்னன்' என வர்ணிக்கப்பட்ட சௌமியமூர்த்தி தொண்டமானின் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரசில் இணைந்திருந்த மலையகத் தமிழ் மக்கள், பின்னர் மலையக மக்கள் முன்னணி உட்பட வேறு பல அரசியல் கட்சிகளை உருவாக்கி, அவையும் அவர்கள் மத்தியில் செல்வாக்கு பெறும் சூழலும் இருந்திருக்கிறது.*

*சிங்கள – முஸ்லிம் - மலையக மக்கள் மத்தியில் நிலவுகின்ற இந்த அரசியல் சூழ்நிலைகள் சந்தேகமின்றி அவர்கள் மத்தியில் நிலவுகின்ற ஜனநாயகம், பன்மைத்துவம் என்பனவற்றின் வெளிப்பாடுகளாகும்.*

*இதேவேளையில் இலங்கையில் சிங்கள மக்களுக்கு நிகரான பாரம்பரியங்கள் உள்ளவர்கள் என்றும், இன்னும் சொல்லப் போனால் 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த குடிகள்' என்று சொல்லிக் கொண்டு (மக்கள் அல்ல தலைமைதான் அப்படிச் சொல்வதுண்டு) வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் மத்திலும் இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து அரசியல் தலைமைகள் இருந்து வருகின்றன. ஆனால் அந்த தலைமையில் ஆட்கள் மாறியிருக்கிறார்களே தவிர, தலைமையின் பாரம்பரியம் மாறாத ஒன்றாகவே என்றும் இருந்து வருகிறது.*

*தலைமைப் பாரம்பரியம் எனும் போது அதன் கொள்கைகளே இங்கு குறிப்பிடப்படுகின்றன. அந்தக் கொள்கைகள் தொடர்ந்து பின்வருமாறு இருக்கின்றன: சிங்கள எதிர்ப்பு, முஸ்லிம் எதிர்ப்பு தமிழ் இனவாதம், நாட்டு பிரிவினைவாதம், பிற்போக்கு ஐ.தே.கவுடன் இரகசிய கூட்டு, ஏகாதிபத்திய – பிராந்திய வல்லாதிக்க சக்திகளுக்கு ஆதரவு, இவைதான் அவை.*

*அவர்கள் தமது அரசியல் நடவடிக்கைகளை சாத்வீகரீதியாகச் செய்தார்கள். பின்னர் சாத்வீகம் பலனளிக்காது என்று சொல்லி ஆயுதம் தாங்கிய வன்முறை பாதையை தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் இரண்டிலும் தோல்விதான் ஏற்பட்டதே தவிர, ஒரு அங்குலம் தானும் முன்னோக்கி அவர்களது வண்டி நகரவில்லை. இப்பொழுது என்ன செய்வது என்று தெரியாமல் வந்துள்ள அவர்கள், தமக்கு விருப்பமான ஐ.தே.க பதவியில் இருப்பதால் அதனுடன் கூடிக்குலாவிக் கொண்டு, 'சர்வதேசம்' எனும் ஏகாதிபத்திய சக்திகள் தமது பிரச்சினையை வந்து தீர்த்து வைக்க வேண்டுமென்று தவம் கிடக்கிறார்கள்.*



*அவர்களுடைய கொள்கைகள் தமிழ் மக்களின் விமோசனத்துக்கு வழி வகுக்கமாட்டா என்பது ஒருபுறமிருக்க, இங்கு அகிம்சையா அல்லது ஆயுதப் போராட்டமா என்பதோ, அல்லது இன்னொரு வார்த்தையில் சொன்னால் மெதுவாக போவதா அல்லது வேகமாக போவதா என்பது அல்ல வெற்றி தோல்வியை தீர்மானக்கும் அடிப்படை பிரச்சினை. முதலில் பார்க்க வேண்டியது, சரியான பாதையில் போகின்றோமா என்பதையே. உதாரணமாக காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கி செல்லும் புகையிரதம் முதலில் சரியான இலக்கை நோக்கி நிற்க வேண்டும். அதை விடுத்து காங்கேசன்துறை நோக்கி நின்று கொண்டு எவ்வளவுதான் முயன்றாலும் கொழும்பை சென்றடைய முடியாது. (இந்த கருத்து தோழர் மு.கார்த்திகேசன் அவர்களின் உபயம்)*

*எனவே, இங்கு பிரச்சினை என்னவென்றல், சரியான இலக்கை நோக்கி நிற்கிறோமா என்பதே. தமிழ் தலைமைகளின் தொடர்ச்சியான தோல்விக்கு அடிப்படை காரணம் அவர்கள் எப்பொழுதும் பிழையான திசை நோக்கி நிற்பதே. அதாவது அவர்களின் கொள்கைகள் தொடர்ந்து தவறாகவே இருந்து வந்துள்ளன.*

*இலங்கையின் சனத்தொகையில் 74 வீதம் சிங்கள மக்கள். அவர்களது ஆதரவு இல்லாமல் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை தமிழ் தலைமைகள் முதலில் உணர வேண்டும். அதற்கு இனவாதம் ஒருபோதும் உதவாது. இரண்டாவது, இலங்கையில் தனிநாட்டு பிரிவினைவாதம் என்பது ஒருபோதும் சாத்தியப்படாது. எனவே அது வெற்றி பெறாது. அதையும் புரிந்து கொள்ள வேண்டும். அரசியல் பேச்சுவார்த்தை மூலமும், பெரும்பான்மை மக்களின் ஆதரவை வென்றெடுப்பதின் மூலமுமே இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுகாண முடியும் என்பதை தமிழ் தலைமை உணர வேண்டும். இதுதான் இங்குள்ள யதார்த்த நிலையும், நடைமுறை சாத்தியமான வழிமுறையும்.*

*இந்த அணுகுமுறையை இன்றுள்ள 65 வருட பாரம்பரியமுள்ள தமிழ் தலைமை செய்யும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் 1947 பொதுத் தேர்தலில்*

*இருந்து தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி இன்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு என பெயர்கள் மாறினாலும், அவைகளின் இனவாத, பிற்போக்கு கொள்கைகளில் மாற்றம் வரவில்லை. இடையில் 20 வருடங்கள் புலிகள் கோலோச்சினாலும் அவர்களின் கொள்கைகளும் இந்த தலைமைகளின் கொள்கைகளாத்தான் இருந்தது. வழிமுறையில் மட்டும்தான் வித்தியாசம் இருந்தது. அதுவும் தோல்வியைத்தான் தழுவியது.*

*இருந்தும் 'சுற்றிச் சுற்றி சுப்பற்றை கொல்லைக்குள்' என்பது போல தமிழ் மக்கள் வேறு எந்த மாற்றுத் தலைமையையும் ஆதரிக்காது இந்த தவறான தலைமைகளையே ஆதரித்து வந்துள்ளனர். இங்குதான் இலங்கையின் மற்றைய இனங்களான சிங்கள, முஸ்லிம், மலையக மக்களிலிருந்து வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் வேறுபடுகிறார்கள். தமிழ் மக்களின் இந்த மாறா நிலையியல்வாதம் அவர்களது இரத்தத்துடனும் மரபுடனும் ஊறியதா அல்லது பழக்க தோசமா என்பது புரியாத புதிராக இருக்கிறது. உலகில் இவர்கள் மட்டும் ஏன் மற்றைய இனங்களைவிட எல்லா விடயங்களிலும் வித்தியாசமாக இருக்கிறார்கள் என்பது உயிரியல் விஞ்ஞானிகளுக்கும், மானிடவியல் ஆராய்ச்சியாளர்களுக்கும் உரியது. இருந்தாலும் இந்த வழிமுறை அவர்களுக்கு ஒருபோதும் பயனளிக்கப் போவதில்லை என்பதை சொல்லித்தான் ஆக வேண்டும். அதுமட்டுமல்ல, அவர்கள் மாற்று கொள்கைகளையும், மாற்று தலைமைகளையும் பரீட்சித்துப் பார்க்க வேண்டிய தேவை இன்று உருவாகியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுவது அவசியம்.*

*இலங்கையில் ஜனவரி 8ஆம் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தியதில் தமிழ் மக்களுக்குத்தான் முக்கிய பங்கு உள்ளது என தமிழ் மக்கள் மார் தட்டுவதை காணக்கூடியதாக உள்ளது. சரி, அதை ஒரு கதைக்கு ஒத்துக் கொள்ளுவோம். இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய புகழுக்குரிய நீங்கள், உங்கள் விடயத்தில் மட்டும் எந்தவித பயனையும் பெறாத போதும் ஒரே தலைமையையே ஏன் 65 வருடங்களாக தொடர்ந்து வைத்திருக்கிறீர்கள்? உங்களுக்கு மட்டும் மாற்றம் ஆகாதா? இப்பொழுது உள்ள தமிழ் அரசியல் தலைமையால் பயன் ஏதும் இல்லை என்பது தெளிவாகிவிட்டதால், ஒருமுறை தன்னும் இன்றுள்ள கையாலாகாத தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமைக்கு பதிலாக வேறொரு மாற்ற தமிழ் தலைமையையும், மாற்று கொள்கைகளையும் ஆதரித்தால் என்ன?*

எனவே, பொதுத் தேர்தல் ஒன்று நெருங்கி வரும் சூழ்நிலையில் தமிழ் மக்களே, இம்முறையாவது மாற்று அணியை வெற்றிபெற வைத்து வேறொரு வழிமுறையையும் பரீட்சித்துப் பாருங்கள். அதைவிடுத்து சுற்றிச் சுற்றி சுப்பற்றை கொல்லைக்குள் நின்று ஆகப்போவது எதுவுமில்லை. எமது இந்த வேண்டுகோளை சற்று பாரதூரமாக சிந்தியுங்கள், ஆக்கபூர்வமாக செயலாற்றுங்கள். *

# தமிழ் இணைய மாநாடு 2015

14 வது உலகத் தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்) தமிழ் இணைய மாநாடு சிங்கப்பூரில் SIM (Singapore Institute of Management) பல்கலைக்கழகத்தில் மே 30, 31, ஜூன் 1 –2015 ஆகிய மூன்று நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. அமர்வுகளில் வந்திருந்த கட்டுரையாளர்கள் தங்களது கட்டுரைகளை வழங்கினர். இம்மாநாட்டில் 75 ஆய்வுக்கட்டுரைகள் தேர்வு செய்யப்பட்டன. அவற்றில் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா நாட்டைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆசிரியர்கள் பேராளர்கள் அனைவரும் இன்றைய தகவல்தொழில்நுட்பம் கொண்டு மாணவர்களுக்கு எவ்வாறு கற்றல், கற்பித்தலில் புது முயற்சியை மேற்கொள்வது என்ற பொருண்மையில் கட்டுரைகளை வழங்கினார்கள். குறிப்பாக வலைப்பூ, முகநூல், தட்டைக்கணனி, அலைபேசி, செயலிகள், இன்னும் புது வகையான மென்பொருள்களைக் கொண்டு தமிழை இலகுவாக அங்குள்ள தமிழ் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் திறனை விளக்கிக் காட்டினர். மேலும் பள்ளியில் பயிலும் மாணவிகள் பல்வேறு புதுமையான முறையில் கற்றல் கற்பித்தல் முறையை கையாண்ட விதம் பிற நாட்டாரை கவர்ந்தது எனலாம்.

இதில் திருச்சியிலிருந்து வந்திருந்த முனைவர் துரை.மணிகண்டன் தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் தனது ஆய்வுக்கட்டுரையை வழங்கினார். இதில் வலைப்பூவின் அவசியத்தையும் வலைப்பூவின் தோற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக் குறித்தும் அதன் தாக்கம் தமிழில் எந்த அளவிற்கு உள்ளது என்றும் கூறினார். இணையத்தில் வலைப்பூவை உருவாக்குவது இலவசம். அவ்வாறு உருவாக்கி தனக்குத் தெரிந்த இலக்கண, இலக்கியக் கருத்துக்களையும் பதிவேற்றம் செய்ய இயலும். மேலும் புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளினால் தயார் செய்யப்பட்ட பாடத்திட்டங்களையும் வெளியிடலாம். அவ்வாறு வெளியிட்டால் உலக அளவில் இருக்கும் தமிழர்கள் பயன்பெறுவர் எனவும் அவர் தெரிவித்தார்.
கீழுள்ள இணைப்பில் மூன்று நாட்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளை காணலாம்:

https://www.youtube.com/watch?v=deDxaYWidRc
https://www.youtube.com/watch?v=iD8LKktToK4
https://www.youtube.com/watch?v=TPdE0xJXB5k

# மனோ கணேசன் கொளுத்திப் போட்ட புஸ்...வாணம்!

தமிழ் சினிமாக்களில் எது இல்லாவிட்டாலும் ஒரு நகைச்சுவைப் பாத்திரம் இல்லாவிட்டால் அது ரசிகர்களின் ஆதரவைப் பெறுவதில்லை. இந்த வழமை சில வேளைகளில் அரசியல் நாடக அரங்குகளுக்கும் பொருந்துவதுண்டு. தென்னிந்திய அரசியல் அரங்கு இதற்கு ஒரு முன்னுதாரணம் எனலாம். இலங்கைத் தமிழர்கள் மத்தியிலும் இப்படியான அரசியல் கோமாளிகள் வலம் வந்திருக்கிறார்கள். வடக்கைப் பொறுத்தவரை முன்பு மகேஸ்வரன் என்ற ஒருவர் அந்தப் பாத்திரத்தை கனகச்சிதமாக வகித்தார்.

ஆனால் இவர்களை எல்லாம் விஞ்சும் வகையில் மனோ கணேசன் என்பவர் இப்பொழுது 'சுப்பர் ஸ்டாராக' இருக்கிறார். அடிப்படையில் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் அசைக்க முடியாத விசுவாசி. அக்கட்சியின் தமிழ் பதிப்பாக (Tamil Edition) 'ஜனநாயக மக்கள் முன்னணி' என்ற அமைப்பையும் நடாத்தி வருகின்றார். அவரது தொழில் பரப்பு மேல்மாகாணத் தமிழர்கள் என்று வரையறுத்து வைத்திருந்தார். பின்னர் அதை மலையகத்துக்கும் விஸ்தரித்தார். சில வேளைகளில் தன்நிலை மறந்து தமது எல்லையை வடக்கு கிழக்குத் தமிழர்கள் வரை விஸ்தரிக்க முயற்சிப்பதும் உண்டு. ஆனால் அவரது கோமாளித்தனமான செயற்பாடுகளை வடக்கு கிழக்குத் தமிழர்களை ஏகபோகக் குத்தகைக்கு எடுத்து வைத்திருக்கும், அரசியலில் பழமும் தின்று கொட்டையும் முளைக்கப் போட்ட சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு கணக்கில் எடுப்பதில்லை.

இந்த மனோ கணேசன் இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் போராடும் 'படை'யின் முன்னணித் தளபதி தான்தான் எனப் பீற்றுவதில் எப்பொழுதும் முன்னணியில் நின்று கொள்வார். அதற்காகப் பல கடிதத் தலைப்பு (Letter Pad) அமைப்புகளையும் வைத்திருக்கிறார்.

அப்படியான 'ஜம்பவான்' இப்பொழுது புதிய நாடகம் (கதை – வசனம் – டைரக்சன் – தயாரிப்பு எல்லாம் அவர்தான்) ஒன்றை அரங்கேற்றியிருக்கிறார். அதாவது ரணில் விக்கிரமசிங்கவின் சிறுபான்மை அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கும் மலையகத்தைச் சேர்ந்த பி.திகாம்பரம், எஸ்.இராதகிருஸ்ணன் என்ற இருவரையும் (இவர்கள் இருவரும் போகாத அரசியல் கட்சிகள் இல்லை) சேர்த்துக் கொண்டு ''தமிழ் முற்போக்கு கூட்டமைப்பு' என்றொரு அமைப்பை உருவாக்கியிருக்கிறார். (சகல பிற்போக்குவாதிகளும் இந்த 'முற்போக்கு' என்ற சொல்லை விடமாட்டார்கள் போல் இருக்கிறது) அதை உருவாக்கிய கையோடு "வடக்கு கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற 15 இலட்சம் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாங்கள்தான்" என மார்தட்டி அறிக்கை வேறு விடுத்திருக்கிறார்!

அவரது அறிவித்தலைக் கேட்டு வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் 15 தமிழ் மக்கள் மட்டுமின்றி, வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களும் அரண்டு போயிருக்கிறார்கள். ஏனெனில் நாளைக்கு திடீரெனத் தங்களையும் சேர்த்து இலங்கையில் வாழ்கின்ற முழுத் தமிழர்களையும் ஏகபோகமாகக் குத்தகை எடுத்து விடுவாரோ என்ற அச்சம் அவர்களுக்கு.

ஆனால் அவர் போட்ட குண்டு வெடிப்பதற்குப் பதிலாக "புஸ்..புஸ்.." புகைந்துவிட்டு அடங்கிவிட்டது. அதற்குக் காரணம் குண்டைக் கொளுத்திப் போட்ட கணேசன் அது வெடிப்பதற்கு முன்பே அதன் மீது ஒரு வாளி தண்ணீரையும் ஊற்றிவிட்டார். பின்னர் அது எப்படி வெடிக்கும்?

உங்களுக்கு இன்னமும் அவரது புஸ்வாணம் பற்றி விளங்காவிட்டால் விளக்குவது நமது கடமை. அவரது 'முற்போக்கு கூட்டமைப்பு' கருத்தரிப்பதற்கு முன்பே அவசரப்பட்டு அது ஐ.தே.கவின் குழந்தை என்று அறிவித்துவிட்டார். ஆம், அடுத்த பொதுத்தேர்தலில் தமது கூட்டமைப்பு ஐ.தே.கவின் யானைச் சின்னத்தில் போட்டியிடும் என்று அறிவித்துவிட்டார்!! அதன்மூலம் இரண்டு விடயங்களைத் தன்னையறியாமலே அம்பலமாக்கிவிட்டார்.

அதில் ஒன்று, இந்தக் கூட்டமைப்பு அவர் சொல்வது போல தமிழ் மக்களின் உரிமைகளுக்குப் போராடுவதற்காகத்



தொடங்கப்பட்டதல்ல. விரைவில் வரப்போகும் தேர்தலை மனதில் வைத்துத் தொடங்கப்பட்டது என்ற விடயம். இரண்டாவது, ஐ.தே.க இலங்கையில் நடைபெற்ற தமிழ் மக்களுக்கெதிரான இன வன்செயல்கள் எல்லாவற்றினதும் சூத்திரதாரி என்ற காரணத்தாலும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண எடுக்கப்பட்ட எல்லா தீர்வு முயற்சிகளையும் குழப்பியது என்ற காரணத்தாலும், அதற்குத் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லாதபடியால் இந்தப் புதிய முன்னணியின் மூலம் ஐ.தே.கவுக்கு வாக்குகள் பெற்றுக் கொடுப்பதே மனோ கணேசனின் திட்டம் என்பதும் தெளிவாகிவிட்டது.

என்னதான் மனோ கணேசன் கழைக்கூத்தாடினாலும் அடுத்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க. மண் கவ்வுவது தவிர்க்க முடியாதது. யானை விழும் போது தன்னருகில் உள்ள எல்லாவற்றையும் நசுக்கிக் கொண்டுதான் வீழும். எனவே மனோ கணேசன் புத்திசாலி என்றால் அதன் அருகில் நிற்காமல் தன்னைத் தற்பாதுகாத்துக் கொள்வது நலம்.

**- சேதுராமன்**